www.padippakam.com

# அக்னி



படிப்பகம்

www.padippakam.com

# அக்னி

மார்ச் - ஏப்ரல்

ஆசிரியர் குழு

அன்பளிப்பு : 3 டீ. எம்

வருடச் சந்தா : 20 டீ. எம்

தொடர்புகட்கு:

AGNI
Alleen str. 17
7144 Asperg
West Germany

சந்தா அனுப்பவேண்டிய விபரங்களுக்கு:

G.Kangatharan
Konto Nr. 7817998054
BLZ 600 501 01
Landesgirokasse
7144 Asperg

அக்னியில் கையெழுத்துடன் இடம் பெறும் ஆக்கங்களின் கருத்துக்கள் ஆசிரியர் குழு வின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

முகவரியிடப்படாது வரும் ஆக்கங்கள், விமர்சனங்கள் பிரசுரிக்கப்படமாட்டாது

எமது இரண்டாவது இதழ் ஒரு மாத இடைவெளியின் பின்னர் தங்கள் கைகளுக்கு கிடைக்கிறது.

தாமதத்திற்காக வாசகர்களிடம் நண்பர்களிடம் மன்னிப்புக் கோருகி றோம்.

எமது சஞ்சிகையை அறிமுகம் செய் துவைத்த அனைத்து சஞ்சிகைகளுக்கும் எமது நன்றிகள்.

இந்த இதழில் இன்று எம்முன் முக் கிய தேவையாக எழுந்துள்ள"ஐக்கியம் தேடல்" என்கிற விவாதம் குறித்தான இரு கட்டுரைகளை பிரசுரம் செய்துள் ளோம்.

இவ்விரு கட்டுரைகளில் ஒன்று ஆய்வு க்கட்டுரையாகவும் தொடர் கட்டுரை யாகவும் இடம்பெறுகிறது.

இக்கட்டுரை சம்பந்தமாக வாசகர்க ளிடம் இருந்து விமர்சனங்களை எதிர் பார்க்கிறோம்.

வாசகர் வட்டங்களை பரவலாக்க வாசகர்களை ஊக்குவிக்க கலந்துரை யாடலை மேற்கொண்டு வருகிறோம்

இந்த இதழில் ஒரிரு ஆக்கங்கள் தவிர ஏனையவை புதிய வாசகர்கள் படைத்துள்ளார்கள்.

கலை, இலக்கிய, அரசியல் சம்பந்தப் பட்ட அனைத்து ஆக்கங்களையும், விம ர்சனங்களையும் வாசகர்களிடம் இரு ந்து எதிர்பார்க்கிறோம்

படிப்பகம்

www.padippakam.com

போராட்டம் வரலாறாகிறது. வரலாறு போராட்டமாகிறது. ஈழத்தின் கடந்த கால, நிகழ்கால அவல நிகழ்வுகள் எமக்கு நிறைய படிப்பினைகளை கற்றுத் தந்து கொண்டிருக்கின்றன. தினமும் மாறிக் கொண்டு வரும் அரசியல் மாற்றங்கள் எம்மைச் சிந்திக்க வைக்கின்றன. நாம் கையாண்டு கொண்டிருக்கும் அரசியல் சித்தாந்தங்ளை மறு பரிசீலனைக்கு உள்ளாக்குகின்றன

இத்தகைய ஒரு நிலையில் எமது நிலைப்பாடுதான் என்ன?. யதார்த்த நிகழ்வுகள் தொடர்பாக எமது சொந்த கருத்துகள்தான் என்ன?.எமது பலவீனங்கள்தான் என்ன?. போராட்டத்தின் ஆரோக்கியமான நகர்வுகளுக்கு நாம் காத்திரமான பங்களிப்பைச் செய்கிறோமா?. இப்படி பல கேள்விகள் எம்முன்னே விசுவரூபமாக எழுந்து நிற்கின்றன.

புலம் பெயர்ந்த நாடுகளில் எம்மவர்களால் சுமார் முப்பதிற்கும் மேற்பட்ட இலக்கிய வெளியீடுகள் வெளியிடப் பட்டுக் கொண்டிருக்கின்றன. கலை இலக்கிய, அரசியல் சஞ்சிகைகளாகவும், ஜனரஞ்சக வெளியீடுகளாகவும் வெளிவரும் அனைத்து சஞ்சிகைகளும் எதுவித தெளிவான நிலைப்பாடுமின்றி வெளியாகிக் கொண்டிருக்கின்றன. ஜனரஞ்சக வெளியீடுகள் வெறுமனே "இலக்கிய வியாபாரம்" செய்து கொண்டிருக்கின்றன. கலை, இலக்கிய,அரசியல் வெளியீடுகள் உறுதியான நிலைப்பாடுமின்றி, தெளிவற்ற பார்வையும்,சரியான கண்ணோட்டமுமின்றி சமகால அரசியல் மாற்றங்களுக்கேற்ப தாமும் வெறுமனே கூக்குரல்களையும், கோசங்களையும் எழுப்பிக் கொண்டிருக்கின்றன.

எமது மண்ணை விட்டு நாம் பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பால் புலம்பெயர்ந்திருந்தாலும் எமது மண்ணில் நடைபெறும் சம்பவங்கள் குறித்து நாம்அலட்சியமாக இருந்துவிட முடியாது. யதார்த்தத்தின் கோர நிகழ்வுகளில் இருந்து எமது மக்களையும் மண்ணையும் விடுவிக்க நாம் காத்திரமான பங்களிப்புக்களை செய்தே ஆகவேண்டியுள்ளது. இதை எப்படிச் செய்வது? இது எம்முன்னே இருக்கும் முக்கிய கேள்வியாகும்.

இந்தக் கேள்வி எம்மிடையே எழுப்பப்படும் போதுதான் "ஐக்கியமும் தேடலும்" என்கிற விடயம் கூடவே எழுந்து வருகிறது. இன்று எம்மிடையே சிதறிக் கிடக்கும் முற்போக்கு சக்திகள் ஏதோ ஒரு வகையில் இங்கு வெளியாகும் சஞ்சிகைகளுடன் தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள் என்பது கண் கூடு. இவர்களை இணைத்து ஒரு ஐக்கியத்தை இன்று கட்டியெழுப்ப வேண்டிய தேவையும் அதனூடாக எமது போராட்டம் தொடர்பாகவும் எமது எதிர் கால செயற்பாடு தொடர்பாகவும் "தேடல்" ஒன்றை மேற்கொள்வதும் அவசியமாகிறது.

படிப்பகம்

www.padippakam.com

இன்றைய நிலையில் முற்போக்கு இலக்கியச் சஞ்சிகைகளுக் கூடாக இதனை மேற்கொள்ள வேண்டிய அவசியமும், எமது போராட்டத்தின் அடுத்த கட்ட நகர்வுகள் குறித்தான எமது தெளிவான கருத்தை முன் வைக்க வேண்டிய தேவையும் எமக்கு ஏற்பட்டுள்ளன. இதை விடுத்து காலத்திற்கேற்ப சந்தர்ப்ப வாதப் போக்கை கையாளுவதும், யதார்த்தத்தை திரிபுபடுத்தி நாங்கள் சொல்வதுதான் சரித்திரம். அதுமட்டும்தான் உண்மை என்கிற கற்பனாவாதப் போக்கில் அராஜகப் போக்குகளை வளர்த்தெடுக்கும் கைக்காரியத்தை செய்ய முனைவது, மக்களையும் குழப்பமுறச் செய்வதுடன் நாளடைவில் அதிருப்தி நிலையை தோற்றுவித்து விடும்.

"இலக்கிய வியாபாரம்" நடாத்தி வரும் சஞ்சிகைகளைப் பொறுத்தமட்டில் அவற்றிற்கு சுயமான கருத்தெதுவும் இல்லாது காலத்திற்கேற்ப,முன்னணி சக்தியாக நிற்பவர்களுக்காக தமது எழுத்தை அடைவு வைத்துக் கொண்டு வருகின்றன. யதார்த்த உண்மைகளை கணக்கிலெடுக்காமல், இலக்கிய விபச்சாரம் செய்வதிலும், சமகாலப் பிரச்சினைகள் தொடர்பாக முற்றிலும் அந்நியமான நிலையில் இருந்து வருகின்றன.

இலக்கிய வியாபாரத்தை முற்றாக மறுதலித்து, சந்தர்ப்பவாதப் போக்குகளை அம்பலப்படுத்தி மனித உரிமை மீறல்களுக் கெதிரான குரலை ஓங்கி ஒலிக்கச் செய்வதுடன், சகலவிதமான அராஜகப் போக்குகளுக்கெதிராக போராட வேண்டிய தேவையும் எமக்கு ஏற்பட்டுள்ளது. முற்போக்குகரமான சஞ்சிகைகளுக்கிடையே பரஸ்பர ஐக்கியமும் அவ்ஐக்கியத்துக் கூடாக தேடலையும் முன்வைத்து செயற்படுவோம்

அக்னி

உன் கால் விரல்களில் தீ
பற்றிக் கொண்ட பின்னும்
பார்த்துக் கொண்டிரு அதை
யாரேனும் காப்பாற்ற வரக்கூடும்.

உன் வீட்டுப் பெண்டிரின்
புடவை நுனி வெறிக்கரங்களில்
சிக்கும் வரை பதறாதே
உன் சுவர்களுக்கு வெளியே

எது நடந்தால் என்ன?

உன் வீடு. உன் தொழில்
உன் மனைவி,உன் பிள்ளை
உன் உலகம்
பெற்றோல் விலையேற்றம்தான்
கொஞ்சம் பிரச்சினை
நன்றி: பாலம்

நாளை
உன் தெருவில்
இரும்புப் பூட்சுகள்
மனிதத்தை மிதித்து

குண்டுகள் வீசப்படும் போதும்
உன் புனிதக் கதவுகளை
உடைத்து நொறுக்கிவிட்டு
ஹிட்லரின் வெறிநாய்கள்
உள் நுழையும்போது கவலையற்றிரு.

நொறுங்கித் துளாகிக் கிடக்கும்
உன் வீடெங்கும் சுப்ரபாத கசெட்டும்,
விஸ்கி, பிராந்திப் பாட்டில்களும்
உன் இனிய மென்மையான
வாழ்க்கையும்

-புதிய ஜீவா


படிப்பகம்

www.padippakam.com

# தேடலும் ஐக்கியமும்

- ஞாலு

எமது நாட்டின் இன்றைய அரசியல் சூழ்நிலையானது, கடந்த பத்து வருடங்களாக எத்தனையோ இழப்புக்கள், தியாகங்கள், துயரங்கள் ஆகிவற்றிற்குப் பின்னர், பள்ளிச் சிறுவர்களை தங்களை விட உயரமான ஆயுதங்களை தூக்கச் செய்துள்ளது. மிகக் குறைந்த ஜனநாயகத்தின் குரலான கருத்துச் சொல்கின்ற சுதந்திரத்தைக்கூட ஒட்டுமொத்தமாக இலங்கை மக்களிடமிருந்து பறித்தெடுத்து அவர்களை மிகப்பயங்கரமான ஆயுத அராஜகத்திற்கு முகம் கொடுக்கும் நிலைக்குத் தள்ளிவிட்டது.

இதற்கு அடிப்படைக்காரணம் சுதந்திரத்தின் பின் அரசகட்டிலில் இருந்த அரசியல் கட்சிகள் வகுத்துக் கொண்ட, வழிநடாத்திய பிழையான அரசியல், பொருளாதார, சமூகத் திட்டங்களேயாகும். இதன் காரணமாக எழுந்த தன்னெழுந்தவாரியான தேசியவாத வீச்சானது, தேசிய வெறிகளாக மாற்றமடைந்து குழுநிலை ஆயுதப்போராட்டம் தோற்றம் பெற்றது. தெளிவான வரையறைகள் இல்லாத காரணத்தால், நீண்டகாலப்போராட்டங்களுக்கு குறுகிய கால அணிதிரட்டல்களும், குறுகியகால திட்டங்களுக்கு நீண்டகால விவாதங்களாக தாமும் குழம்பியதுடன் மக்களையும் குழப்பிக் கொண்டார்கள். இறுதியில் பல்தேசிய சதிகாரர்களிடம் தம்மை அடகுவைத்துக் கொண்டதுடன், முழு இலங்கையின் இறைமையையும் பல்தேசியங்களின் தாசர்களிடம் இன்று அடகு வைக்கின்ற நிலையை உருவாக்கியுள்ளது.

இந்தநிலையில் இன்றைய தேவையாக அமைவது கடந்தகால போராட்டங்கள் பற்றிய நேர்மையான விமர்சனப் பார்வையும், ஆய்வு ரீதியான அடிப்படைகளை ஆதாரமாகக் கொண்ட சரியான பாதைக்கான தேடலுமேயாகும். இது ஒரு சில தனி மனிதர்களினால் மட்டும் சாத்தியப் படக் கூடியதுமல்ல, நிறைவு செய்யப் படக் கூடியதுமல்ல. இதைச் செய்வதற்குச் சமூக உணர்வுகள் கொண்ட பல தரப்பட்ட சக்திகளின் கூட்டும் அவசியமாகிறது.

இக் காரணிகளினால் இன்றைய அதிதேவையானதும் தவிர்க்கமுடியாததுமான மக்களின் ஜன நாயகத்திற்கான குரலை சகல மட்டங்களிலும் ஒலிக்கச் செய்வது அவசியமாகின்றது மிகக் குறைவான கோரிக்கையின் அடிப்படையிலான குறைந்த பட்ச ஐக்கியமும், அவ் ஐக்கியத்துக்கூடானத் தேடலும், அத்தேடலின் ஊடாக இறுக்கமான கருத்துரீதியிலான ஐக்கியமும் என்னும் அடிப்படையில் நமது தேசிய விடுதலைப் போராட்டம் ஏற்

படிப்பகம்

www.padippakam.com

படுத்திய சமூகவிளைவுகளையும் தாக்கங்களையும் ஆய்வு செய்கின்ற முயற்சியின் முதல்படி இதுவே.

முதலாவதாக, புவிசார் உற்பத்திகளுடன் தம்மை முழுமையாக இணைத்துக் கொண்டவர்கள், சந்தை விநியோகத்துடன் சார்ந்துள்ளவர்கள். பல்வேறு குடும்ப அக புற சூழ்நிலமைகாரணிகளால் தம்மை தமது குடும்பஉறவுகளுடன் நீண்ட காலத்திற்கு துண்டித்துக் கொள்ள முடியாதவர்கள், தேசிய விடுதலைப் போராட்டத்தின் வீச்சுக்களால் பாதிப்படையாத சேவைத் தொகுதிகளுடன் இணைந்த சேவை வர்க்கத்தினர், அவலமான சுழல்களிலும் முகம் கொடுத்து மிகப் பாதிப்படைகின்ற நிலைகளிலும் வெளிநாடுகளுக்கு தம்மை நகர்த்திக் கொள்ள முடியாத பாட்டாளி மக்கள், தமது அடிப்படைக் கல்வியைத்தானும் சீராகக் கற்க முடியாமல் இளைய பருவத்தினர்.

மேற்குறிப்பிட்ட அனைவரும் எமது நாட்டின் மோசமான இராணுவ, பொருளாதார தாக்கங்களுக்கு முகம் கொடுக்கின்ற அதே நேரத்தில் அவற்றிற்கெதிராக சாதாரண மனிதாபிமானத்திற்குமான குரலை கொடுக்க முடியாமல, குமுறல்களுக்கு மத்தியில, திசை தெரியாமல் தவிப்பவர்கள். ஆனால் போராட்டத்தை நகர்த்திச் செல்லவேண்டிய தேவையும் தகமையும் உடையவர்கள்.

எதிரியின் அடக்குமுறை காரணமாகவும், தேசிய உணர்வு காரணமாகவும், ஆயுத போராட்டத்தின் வீச்சுக்களின் தாக்கங்களின் காரணத்தினாலும் தேசிய விடுதலைப் போராட்ட இயக்கங்களுடனும் தம்மை இணைத்துக் கொண்ட இளைய தலைமுறையினர்.

இந்த இளைய தலைமுறையினரில் பெரும்பாலானோர் ஒரு இராணுவவீரர்களின் நிலையில் தம் தலைமைகளின் கட்டளைகளுக்கு எதுவித நிபந்தனையுமின்றி நிறைவேற்றுகின்ற வகுப்பைச் சார்ந்தவர்கள். தலைமைகளின் சதிகளுக்கோ, அரசியல் பலவீனங்களுக்கோ எதுவித தொடர்பும் இல்லாதவரகள். ஆனால் இயக்க குரோதங்கள காரணமாகவும், தம் சுயபாதுகாப்புக் காரணங்களுக்காகவும் நிலமைகளை புரிந்து கொண்டோ புரியாமலோ அவர்களுடன் இணைந்து இருக்க நிர்பந்திக்கப்படுபவர்கள்.

மற்றைய ஒரு சாரார் கடந்தகால நிகழ்வுகளையும் தாக்கங்களையும், போக்குகளையும் புரிந்து கொண்டாலும் இயக்கங்களில் இவர்கள் இனம் காட்டப்படுவதன் ஊடாக ஏற்படக் கூடிய விளைவுகளையும் அப்படி இனம் காட்டப் பட்டவர்களுக்கு ஏற்பட்ட நிலமைகளையும் கருத்திற் கொண்டும் இயக்க முரண்பாடு காரணத்தினால் தமது பாதுகாப்புக் கருதியும், காலம் கனியும்வரை காத்திருப்போம் என்னும் மன நிலையில் செயற்படுபவர்கள்.

இவர்கள் எண்ணிக்கையில் மிகச் சிறுபான்மையினராகவும், இயக்கங்களின் முரண்பாடுகள் காரணமாக அனைத்தியக்கங்கிளிலிருந்தும் ஒன்று பட்டு செயல்படும் வாய்ப்பற்றவர்கள். இவர்களே ஐக்கியத்துக்கூடாக அடுத்த கட்ட போராட்டத்திற்கு தலைமை தாங்கக்கூடியவர்களும் ஆவர் ஆனால் அக்கட்டம் இன்னும் தெளிவான ஒரு பாதையை நோக்கி நகரவில்லை என்றே கூறவாம். இதற்கு காரணம் கடந்த காலங்களில்

படிப்பகம்

www.padippakam.com

"விடுதலைப் போராட்டம் கூர்மையான வீச்சுக்களை கொண்டிருந்த நேரத்திலேயே தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு விடுதலைப்போராட்டத்தின் தீவிர ஆதரவாளர்களாகவும், முன்னணி மக்கள் விரும்பிகளாகவும் காட்டிக்கொண்டவர்களும் இவர்களே"

தேசிய விடுதலைப் போராட்டத்துடன் தம்மை இணைத்துக் கொண்ட இடது தீவிர வாதிகள், முற்போக்கு வாதிகள், முற்போக்கு தேசியவாதிகள் கையாண்ட முறைகேடான போராட்ட வழிகளாகும். இதன் காரணத்தால் இவர்களில் பலர் உட்கொலைகளுக்கு ஆளானதுடன், இயக்கங்களுக்குள் அராஜகம் சந்தேகம் ஆகிய இரு போக்குகளையும் வளர்த்து விட வழிவகுத்தது. சிவர் கருத்துப்போராட்டங்களை தனிநபர் முரண்பாடுகளாக்கி எதிரப்புரட்சிகர சக்திகள் வெற்றிபெறவும் வழிவகுத்தனர்.சிவர் கருத்து போராட்டங்களை தனிநபர் முரண்பாடுகளாக்கி சதிகார சக்திகள் வெற்றிபெறவும் வழிவகுத்தனர். தேசிய விடுதலைப் போராட்டத்தில் இயக்கங்களிலும்,இயக்கங்களின் மீதான இயக்கங்களின் போராட்டங்களிலும் அதன் வடிவங்களிலும் இம்முரண்பாடுகளை தெளிவாக புரிந்து கொண்டு பிற்போக்கானவர்களையும், அவர்களின் அருவடிகளையும், அராஜகசக்திகளையும் பலப்படவும், இவ்வாறான தந்திரோபாயங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அந்நிய சதியாளர்கள் வெற்றிபெற்றதுமல்லாமல் வருங்காலங்களிலும் முற்போக்கு சக்திகளின் நடவடிக்கைகளில் தேக்கத்தை உண்டு பண்ணியுள்ளது.

நிலப்பிரபுத்துவக் கருத்துக்களை இறுக்கமாகக் கொண்ட இன்னுமொரு சாரார் நாட்டில் உண்டு. இவர்கள் நிலப்பிரபுத்துவ மண்மேல் கொண்டுள்ள இறுக்கமான பிடிப்புக் காரணமாக எமது நாட்டில் நிலை கொண்டுள்ள மத்தியதர வர்க்கத்தினராவர் இவர்களில் பெரும்பாலானோர் சமூக அந்தஸ்துக்காக எவ்வித நோக்கங்களுமின்றி விடுதலைப் போராட்டங்களை ஆதரிப்பவர்கள். அதனூடாக தமது நலன்களை பாதுகாக்க முற்படுபவர்கள். தமது நலன்களுக்காக இயக்கங்களிடையே பகை உணர்வை வளர்த்து, அதனூடாக இயக்கங்களை தமக்குச்சாதகமாக பயன்படுத்தவும் வல்லவர்கள். முன்னணி சக்தியாக இருப்பவர்களையே எப்போதும் இவர்கள் ஆதரித்து வருவார்கள். எது எப்படி ஆகிலும்,தமது சமூக அந்தஸ்தும், தங்களுடைய நலன்களுமே இவர்களின் முக்கிய குறிக்கோள்களாகும். விடுதலைப் போராட்டம் கூர்மையான வீச்சுக்களை கொண்டிருந்த நேரத்திலேயே தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு விடுதலைப் போராட்டத்தின் தீவிர ஆதரவாளர்களாகவும், முன்னணி மக்கள் நலன் விரும்பிகளாகவும் காட்டிக் கொண்டவர்களும் இவர்களே.

எமது நாட்டில் 77ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சார்பு முதலாளித்துவ ஐக்கிய தேசியக் கட்சி அரசின் பொருளாதாரக் கொள்கை அதற்கு முந்திய ஐக்கிய முன்னணி அரசின் தேசிய மதுலாளித்துவ பொருளாதாரக் கொள்கை காரணமாக உருவாகிக்கொண்டிருந்த விவசாய உற்பத்திப் பொருட்

www.padippakam.com

"தொடர்ச்சியான இராணுவ ஒடுக்குமுறைகளுக்கு முகம் கொடுக்க முடியாமலும், இயக்கங்களின் உள் முரண்பாடுகள் காரணமாக அவற்றினுள் ஏற்பட்ட அராஜகப் போக்குகளினாலும், இயக்க மோதல்களினாலும், சர்வதேச சதிகார சக்திகள் இயக்கங்களினுள் நுழைந்ததன் விளைவாக ஏற்பட்ட மாற்றங்களினால் பல இளைஞர்களை போராட்டத்தில் நம்பிக்கையிழக்கச் செய்தன."

களுக்கான கிளிநொச்சி, வவுனியா பிரதேச சந்தைகளை கருக்குலைப்புச் செய்தது. இதனால் இச் சந்தைகளை நம்பி விவசாயத்திலும், வியாபாரத்திலும் ஈடுபட்டிருந்த பெரும்பாலான இளைஞர்கள் தம் தொழில் வாய்ப்புக்களை இழந்தனர்.

77ம் ஆண்டு இனக்கலவரம் காரணமாக இலங்கையின் கிராமப்புறங்கள் சார்ந்த சிங்களப் பிரதேசங்களில் சிறு வியாபாரிகளாகத் திகழ்ந்தவர்களுமே முதலில் எமது மண்ணை விட்டு புலம்பெயர்ந்தவர்களாவர். இவர்களுடைய புலப் பெயர்வுக்கு முக்கிய காரணம் பொருளாதாரமே.

படிப்படியாக இலங்கை அரசஇராணுவத்தினரின் அடாவடித்தனங்களும் முன் புலம் பெயர்ந்தவர்களின் குடும்பங்களின் பொருளாதார நிலைகளில் ஏற்பட்ட மாற்றமும் படித்து விட்டு வேலை அற்றிருந்த இளைஞர்களின் ஒரு பகுதியையும், இலங்கை அரசநிர்வாகங்களில் வேலை வாய்ப்பைப் பெற்றும், இனவாத வீச்சு காரணமாகத் தமது சேவையைத் தொடர முடியாதவர்களையும் புலப்பெயர்வுகளுக்கு உள்ளாக்கின.

தொடர்ச்சியாக ஏற்பட்ட இனக்கலவரங்களும், அரச இராணுவத்தின் அடாவடித்தனங்களும், இவற்றின் உச்சக் கட்டமாக 83ம் ஆண்டு ஏற்படுத்திய இனக்கலவரங்களும், தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆயுத முனைப்பும், அவற்றினால் ஏற்பட்ட பாதிப்புக்களும் எமது மக்களில் பெரும்பாலானோரை 83 களில் பொருளாதார காரணங்களுக்காக மட்டுமல்லாது பாதுகாப்புக் காரணங்களுக்காகவும் ஐரோப்பிய புலப் பெயர்வுகளுக்கு இட்டுச் சென்றது.

85களின் பின்னர், ஆயுதப் போராட்ட அலை காரணமாக தேசிய விடுதலைப் இயக்கங்களில் தம்மை இணைத்துக் கொண்டவர்கள், தொடர்ச்சியான இராணுவ ஒடுக்கு முறைகளுக்கு முகம் கொடுக்க முடியாமலும், இயக்கங்களின் ,உள்முரண்பாடு காரணமாக அவற்றினுள் ஏற்பட்ட அராஜகப் போக்குகளினாலும், இயக்க மோதல்களினாலும், சர்வதேச சதிகார சக்திகள் இயக்கங்களுள் நுழைந்ததன் விளைவாக ஏற்பட்ட மாற்றங்களினால் பல இளைஞர்களை போராட்டத்தில் நம்பிக்கை இழக்கச் செய்தன. தேசிய உணர்வும் முற்போக்கு குணாம்சமும் கொண்ட இவ்விளைஞர்கள் பலரை புலப்பெயர்வுகளுக்கு ஆளாக்கியது.

இவ்வாறாக புவி சார் உற்பத்தி உறவுகளுடன் தம்மை இணைத்துக் கொள்ளாதவர்களில் பெரும்பாலான மத்தியதர வர்க்கத்தைச் சார்ந்தவர்களையும், புத்திஜீவி மட்டங்களில் இருந்த பலரையும் தேசிய விடுதலை இயககங்களின் சூழ் நிலை ஆயுதப் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளத் தவறினாலும், அரசின் இனவாதப்போக்கு காரணமாகவும், வடக்கு கிழக்குகளில் நிர்வாகச் சீர்குலைவுகள் காரணமாகவும் தமது பொருளா

படிப்பகம்

"தமது நிலப்பிரபுத்துவ கருத்துருவங்களிலிருந்தும், கலாச்சார பண்புகளிலிருந்தும் விடுபடமுடியாமலும், ஐரோப்பிய நிறவாத உணர்வுகளாலும், தம்மை முழுமையாக ஐரோப்பிய சமூகத்துடன் இணைத்துக் கொள்ளமுடியாமலும் இருந்தனர்"

தார பாதுகாப்பு நலன் கருதி புலம் பெயர்ந்தனர். இவர்களில் பலர் குடும்பங்களுடன் புலம் பெயர்ந்தார்கள்.

எமது போராட்டத்தின் இன்றைய தேக்க நிலையானது, மேல் வகைப்படுத்தப்பட்ட சமூக விளைவுகளையும் அதனடிப்படையில் ஏற்படக் கூடிய அரசியல்ப் போக்குகளையும் நிலைகளையும் தளங்களாகக் கொண்டு அடுத்த கட்டத்திற்கு போராட்டத்தை நகர்த்த வேண்டிய அவசியத்தை உண்டுபண்ணியுள்ளது. இந்நோக்கின் முதல் கட்டமாக எமது கடந்த கால போராட்டங்களின் விளைவுகளை மறுபரிசீலனை செய்யவேண்டியதும் அதனடிப்படையிலான சமூகமாற்றங்களை ஆய்வு செய்ய வேண்டியதும் எமது கடனாகிறது.

இக் காரணிகளை கருத்திற் கொண்டு இன்றைய புலம் பெயர்ந்த தமிழ் சமூகம் பற்றிய ஆய்வொன்றை முன் வைக்கிறோம். இது மேலும் ஆய்வுகளுக்கும் விமர்சனங்களுக்கும் உட்படுத்த வேண்டிய ஒன்றே.

## குடிபெயர்ந்தோர்கள்

உயர்கல்விபெறவும், கல்வித்தகமைகளுனூடாக ஐரோப்பிய நாடுகளில் வேலை வாய்ப்புக்கள் பெற்றும், வியாபார நோக்கங்களுக்காகவும் நீண்ட காலங்களுக்கு முன் குறிப்பபாக லண்டன், அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு வடபகுதியிலிருந்து பலர் முதலில் புலம் பெயர்ந்துள்ளார்கள். இவர்களில் ஒருபகுதியினர் ஐரோப்பிய நாடுகளுடன் பொருளாதார ரீதியில் தம்மை இறுகப் பிணைத்துக் கொண்டனர். தமது நிலப்பிரபுத்துவ கருத்துருவங்களில் இருந்தும் கலாச்சாரப் பண்புகளில் இருந்தும் விடுபடமுடியாமலும் ஐரோப்பிய நிறவாத உணர்வுகளாலும், தம்மை முழுமையாக ஐரோப்பிய சமூகத்துடன் இணைத்துக் கொள்ள முடியாமலும் இருந்தனர். எமது நாட்டுடனான உறவுகள் நீடித்து இருந்தமையாலும், முழுமையாக ஐரோப்பிய வாழ்நிலைகளுக்குத் தம்மை இணைத்துக் கொண்டதன் ஊடாக ஐரோப்பிய வர்த்தக உறவுகளுக்காகவும் எமது நாட்டின் அரசியல் மாற்றங்களை தமக்குச்சாதகமாக்கிக் கொண்டனர்.

இதன் மூலம் தமது மூலதனங்களின் ஊடாக குறைந்தகூலிக்கு எமது மக்களின் உழைப்பை பெறுவதன் மூலம் அதிக லாபம் பெறும் நோக்குடன் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைக் கூலிகளாகவும் நாளைய எமது நாட்டின் மூலதன முகவர்களாகவும் செயல் படும் நோக்குடையவர்களாகவும் இருந்தனர்.

மற்றொரு பகுதியினர், இன உணர்வு காரணமாக விடுதலை இயக்கங்களுக்கு தமது அறிமுகமானவர்களின் வற்புறுத்தல்களுக்காக நிதி செய்வதுடன் தமது பங்கை செலுத்துபவர்கள்.

இவர்களில் இன்னொரு பகுதியினர் நீண்ட கால ஐரோப்பிய வாழ்

www.padippakam.com

"இவர்களின் மனோ நிலைகளில் சில வித்தியாசங்கள் இருந்தாலும், பல அம்சங்களில் பொதுவான தன்மை காணப்படுகிறது. ஆனால், கனடா, அவுஸ்திரேலியா இவ்விரு இடங்களில் உள்ளவர்களின் வித்தியாசமான மனோநிலை வேறாக ஆராயப் படவேண்டியதே"

நிலைகளுக்கூடாக ஐரோப்பிய சமூக உணர்வுகளை உள்வாங்கியதன் விளைவாக அதன் சீரழிவுகளுக்கும் உட்பட்டனர். தம்மை ஐரோப்பியராகவே கருதிக் கொண்டு எமது நாட்டின் அவலங்களிலோ, அவற்றின் விளைவுகளிலோ, எவ்வித அக்கறையும் இல்லாதவர்கள்.

அண்மைக் காலங்களில் நாட்டின் அவலங்கள் காரணமாக அகதிகளாக வெளியேறியோரில் குறிப்பாக கனடா, அவுஸ்திரேலியா(சிறிய தொகையினர்) நோர்வே, டென்மார்க், பிரான்ஸ்(வதிவிட அனுமதி பெற்றவர்களில் ஒரு பகுதியினர்) தம்மை குடிபெயர்ந்தவர்கள் என்கிற மனோ நிலைக்கு உள்வாங்கிக் கொண்டவர்களுமுண்டு.

இவர்களில் ஒரு சிலர் கடந்தகாலங்களில் விடுதலை இயக்கங்களின் நிதி சேகரிப்பு நடவடிக்கைகளிலும் துரோகத்தனங்களிலும் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்திருக்கிற போதும் இது விரிவான ஆய்வுகளுக்கு உள்ளாக்கப்பட வேண்டிய ஒன்று

இவர்களில் கண்டிக்கப் படவேண்டிய இன்னொருசாராரும் உண்டு. அவர்கள் தமது சொந்த நலன்களுக்காகவும், நாட்டில் உள்ள அரசியல் சூழ்நிலைகள் காரணமாகவும் நாட்டைவிட்டு வெளியேறியுள்ள புத்திஜீவிகள் வகுப்பைச் சார்ந்தவர்கள். இவர்களில் பலர் பொருளாதார, சமூகவியல் அறிஞர்கள் ஆகத் திகழ்கின்றனர். இவர்களுடைய கல்வி வசதிக்காக (இலவசக் கல்வி) இலங்கையின் சாதாரண குடிமகனுடைய உழைப்பும் செலவுசெய்யப் படுகின்றது. ஆனால் இவர்கள் இன்று வெளிநாடுகளில் எவ்வித சமூகப் பிரச்சினையும் அற்று வாழ்கிறார்கள்.

## புலம் பெயர்ந்தோர்கள்

எமது நாட்டின் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி காரணமாகவும், பொருளாதார நோக்கங்களுக்காகவும் எமது நாட்டைவிட்டு வெளியேறி உள்ளவர்கள். இவர்களில் ஒரு சாரார் அரசியல் நெருக்கடிகளை காரணம் காட்டி ஐரோப்பிய நாடுகளில் அகதிகள் அந்தஸ்து கோரியுள்ளவர்கள். இவர்கள் பொதுவாக ஜேர்மனி,பிரான்ஸ்,நோர்வே,டென்மார்க்,சுவிற்சலாந்து, இத்தாலி, பிரித்தானியா,ஒல்லாந்து,கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வாழ்கிறார்கள்.

இவர்களின் மனோ நிலைகளில் சில வித்தியாசங்கள் இருந்தாலும் பல அம்சங்களில் பொதுவான தன்மை காணப்படுகின்றன. ஆனால் கனடா, அவுஸ்திரேலியா இவ் இரு இடங்களில் உள்ளவர்களின் வித்தியாசமான மனோநிலை வேறாக ஆராயப் படவேண்டியதே.

இவர்களை விட அரபு நாடுகளில் தமது உடல் உழைப்பை விற்கின்ற உழைப்பிற்காகவே அங்கு சென்றுள்ள ஒரு பிரிவினரும் உண்டு. அரசியல் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தும் இயக்கங்களினால் பயிற்சிகளுக்கு கொண்டு செல்லப் பட்டும் தனிமைப்ப


படிப்பகம்

www.padippakam.com



"கனடா, லண்டன் போன்ற நாடுகளில் குடியேறியவர்கள் அங்குள்ள குடியுரிமை சட்டவிதிகளின் இசைவு காரணமாகவும், மொழி வசதி காரணமாகவும், பிள்ளைகளின் கல்வி வசதி கருதி அந்த நாடுகளின் பிரஜைகளாக இருக்கும் நோக்குடையவர்கள்"

டுத்தப்பட்ட காரணங்களினாலும்,வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் பிரயாண முகவர்களினால் ஏமாற்றப்பட்ட காரணத்தினாலும் இந்தியாவின் தலை நகரங்களில் குறிப்பாக பம்பாய், சென்னை, டில்லி ஆகிய இடங்களில் தமது வாழ்க்கை தேவைகளுக்காக போதைவஸ்து, ஆயுதகடத்தல், விபச்சாரம் போன்றவற்றில் ஈடுபடுபவர்கள்,வெளிநாடுகளில் உள்ள நண்பர்கள், உறவினர்கள் நிதி உதவி மூலம் குறிப்பாக சென்னையிலும்,தமிழ்நாட்டின் ஏனையபகுதிகளிலும் கல்டத்தின் மத்தியில் வாழ்பவர்கள், வெளிநாட்டு பிரயாண முகவர்கள் அவர்களின் அடியாட்கள் என ஒரு பிரிவினரும் புலம்பெயர்ந்தவர்களாக பலதரப்பட்ட மனோ நிலைகளிலும் உள்ளனர் இவர்கள் பற்றிய மதிப்பீடொன்றை மேற்கொள்வது அவசியமானதாகும்.

புலம் பெயர்ந்தவர்களில் ஒரு பகுதியினர், முன் குறிப்பிட்டது போல கனடா, லண்டன் போன்ற நாடுகளில் குடியேறியவர்கள் அங்குள்ள குடியுரிமை சட்டவிதிகளின் இசைவு காரணமாகவும், மொழி வசதி காரணமாகவும் பிள்ளைகளின் கல்வி வசதி கருதி அந்த நாடுகளின் பிரஜைகளாக இருக்கும் நோக்குடையவர்கள். சொந்த வீடுகள்,முதவீடுகள் ஊடாக அந்த நாடுகளிலேயே தமது மூலதனங்களை வளர்த்துக்கொள்ளும் முயற்சியில் அதிகம் ஈடுபடுபவர்கள். அதனால் நீண்ட நேரத்தை தொழில் சாலைகளிலேயே செலவிடுவதனால் சமூகம் பற்றியோ இவர்கள் கவனம் செலுத்த முடிவதில்லை.

கலாச்சார மோதல்களும் இங்கு அதிகம் நிகழ்கின்றன. இதற்கு இரு காரணங்கள் உண்டு. முதவாவது,நாட்டின் விமர்சனங்களுக்கு தாம் அதிகம் முகம் கொடுக்க வேண்டிய அவசியம் இங்கு இல்லை என்பதும், இரண்டாவதாக இங்கு பல இனத்தினர் வாழ்கின்ற ஒரு கலப்பு சமூகமாக இருப்பதுமாகும். நோர்வே, கனடா ஆகிய நாடுகளின் சீதோஸ்ண நிலை எமது நாட்டின் சீதோஸ்ண நிலைக்கு நிலைக்கு எதிர்மாறானது என்கிற காரணத்தினாலும் இவர்களுடைய கடுமையான நீண்டநேர உழைப்பினாலும் குறிப்பிட்ட காலத்தில் நோய்வாய்ப்பட சாத்தியங்கள் உண்டு. இதனால் சீதோஸ்ண நிலை மாற்றம் வேண்டியே இவர்களில் பெரும்பாலானோர் நாடு திரும்ப வேண்டிய நிலைக்கு தள்ளப்படலாம். மற்றைய நாடுகளிலும் சொந்த மூலதனத்தை வளர்ப்பதிலேயே குறியாக உள்ளவர்களும் இருக்கிறார்கள். இவர்களில் கனடா தவிர்ந்த ஏனைய நாடுகளில் வர்த்தக ரீதியில் தம்மை நிலை நிறுத்த உள்,ள சட்ட வாய்ப்புக்களின் பிரச்சினை காரணமாக இவர்களின் மூலதனம் பணமாக உள்ளது. இவ்வடிப்படையில் இவர்களில் பெரும்பாலானோருக்கு அந்த நாடுகளில் வதிவிட அனுமதியும் அதனூடாக பிரஜா உரிமை பெறுவதே இவர்கள் முன் உள்ள பிரச்சினையாகும்.

தொடரும்.

படிப்பகம்

www.padippakam.com

## இலக்கியச் சந்திப்பு

-கங்கா

மேற்கு ஜெர்மனியில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் "இலக்கியச் சந்திப்பின்" ஏழாவது தொடர் 07.04.1990 அன்று கிறேவெல்ட் (Krefeld) நகரில் நடைபெற்றது.

இவ்விலக்கியச் சந்திப்பில் தூண்டில், சிந்தனை, சிறுவர் அமுதம், புதுமை வெகுஜனம், மண், நமது குரல், தளிர், தேனீ, அக்னி, பள்ளம் (பிரான்ஸ்) அ.ஆ.இ.ஈ (ஒல்லாந்து), சுவடுகள் (நோர்வே) ஆகிய சஞ்சிகைகள் கலந்து கொண்டன.

மாலை ஏழு மணிவரை நடைபெற்ற இச்சந்திப்பின் போது சஞ்சிகைகளின் ஆசிரியர்களும் வாசகர்களுமாக நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஈழத்தில் அவலங்கள் காரணமாக மரணித்த போராளிகளுக்காகவும் மக்களுக்காகவும் இருநிமிட மௌன அஞ்சலி நிகழ்த்தப் பட்டதன் பின் இலக்கியச் சந்திப்புக்கு வருகை வந்த அனைவரையும் திருநாவுக்கரசு வரவேற்று பேசினார்.

முதல் நிகழ்ச்சியாக "மேற்கு ஜெர்மனியில்வெளியாகும் தமிழ்ச் சஞ்சிகையில் பெண்ணிலைவாதக் கருத்துக்கள்" என்னும் கருத்தரங்கு இடம் பெற்றது. இக்கருத்தரங்கில் முதல் உரையாற்றிய இன்பா சுசீந்திரன், "பெண் என்பவள் எப்படி ஒடுக்கப் படுகிறாள் என்பதை முதலில் இனங் கண்டு கொள்ளவேண்டும். இன்று மேற்கு ஜெர்மனியில் வெளியாகும் சஞ்சிகைகளில் பெண்ணடிமைத்தனம் பற்றிய கருத்துக்கள் நிறைய வெளிவந்தாலும், இவற்றில் ஆக்கங்களைப்படைப்போர் பெரும்பாலானோர் ஆண்களாகவே இருக்கின்றனர். மிகவும் குறைவான பெண்கள்தான் எழுத முன்வருகிறார்கள்" எனக் குறிப்பிட்ட அவர், சஞ்சிகைகள் சிலவற்றில் வெளியான ஆக்கங்களை விமர்சித்துப் பேசினார்.

பெண் வாசகர் ஒருவரிடமிருந்து வந்த கட்டுரை ஒன்றை செல்வி கமலா வாசித்துக் காட்டினார். "இங்கு வெளியாகும் சஞ்சிகைகளில் இடம்பெ

படிப்பகம்

றும் பெண்கள் பற்றிய ஆக்கங்களில் அவை எப்படிப்பட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன என்பதை பார்க்கவேண்டும்" என ஆரம்பித்த இக்கட்டுரையானது விக்னா பாக்யநாதனின் "கவிதைச் சோலை" என்னும் கவிதை தொகுப்பில் இடம்பெற்ற சில கவிதைகள் சிலவற்றின் சாராம்சங்களை கடுமையாக விமர்சனம் செய்யப் பட்டிருந்ததுடன் சஞ்சிகைகளில் வெளி வந்த பெண்ணிலை வாதக் கருத்துக்கள் சம்பந்தப்பட்ட ஆக்கங்கள் விமர்சனத்திதிற்குள்ளாக்கப்பட்டிருந்தன. இக்கட்டுரையானது வாசகரின் வக்கிரமற்ற பார்வையைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விரு உரைகளையும் உள்ளடக்கிய வாசகர் விமர்சனங்கள் சற்று காரசாரமாகவே அமைந்திருந்தன. பெண்கள் சந்திப்பு தொடர்பாக "நமது குரல்"ச்சஞ்சிகை ஆசிரியர் தேவிகா கங்காதரன் சில கருத்துக்களை முன்வைத்தார். தூர இடங்களில் இருந்து பெண்கள் வந்து ஓரிடத்தில் சந்திப்பதில் பல சிரமங்களை எதிர்நோக்கவேண்ண்டியுள்ளது. ஒவ்வொரு நகரத்திலும் பெண்கள சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் என்னென்ன நடைபெற்று வருகின்றன என்பதை பெண்கள் சந்திப்பில் அறியக்கூடியதாகவுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

நாம் மத்தியதரவர்க்கத்திலிருந்துதான் வந்திருக்கிறோம். பெண்களுக்கான விடுதலை சமூக மாற்றத்தின் மூலமே ஏற்படும். தலைமைத்துவத்தை ஏற்க மத்தியரத்து வர்க்கத்து பெண்களால் முடியாது. அதனை பாட்டாளி வர்க்க பெண்களால்தான் ஏற்க முடியும் என அலெக்ஸ் என்பவர் கூறிய கருத்து தொடர்பாக காரசாரமாக வாசகர்கள் விமர்சனம் செய்தார்கள். மத்தியதர வர்க்கத்து பெண்களில் பெரும்பாலானோர் இன்று தொழில் புரிபவர்களாக இருப்பதால் அவர்களும் தலைமை தாங்கக் கூடிய வாய்ப்புக்களும் உண்டு என வாசகர் ஒருவர் தெரிவித்த கருத்து நிச்சயம் விமர்சனத்திற்குள்ளாக்கப்படவேண்டும். இந்தக் கருத்து விவாதங்களின் இறுதியில், பெண்கள் அனைவரும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். பெண்களின் விடுதலை எப்படி முன்னெடுக்கப்படவேண்டும் என்கிற கருத்து கட்டமைப்புக்கள் ஆண்களிடமிருந்து போகவேண்டும் என்கிற அவசியம் இல்லை என இளங்கோ என்பவர் தருத்து தெரிவித்தார்.

இரண்டாவது நிகழ்ச்சியாக அமைந்த "வாசகர்கள் விமர்சனங்களின்" போது தூண்டில், சிந்தனை, புதுமை சிறுவர்அமுதம் ஆகிய சஞ்சிகைகள் விமர்சனம் செய்யப்பட்டன. சிறுவர் அமுதம் சஞ்சிகை அதிகமாக வாசகரின் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டது. சிறுவர்களுக்கான ஆக்கங்களைப் படைக்கும்போது முற்றிலும் கவனமெடுக்கப்பட வேண்டுமென குறிப்பிட்ட திரு. நித்தியானந்தன், சஞ்சிகைகளில் வெளியான சில ஆக்கங்களை உதாரணப்படுத்தி விமர்சித்தார்.

மூன்றாவதாக இடம்பெற்ற "இந்தியாவில் பெண்களின் நிலை" பற்றிய வீடியோ படக்காட்சியில், இந்தியாவில் பெண்கள் திருமணம் தொடர்பான ஒடுக்குமுறைகள், சீதனக் கொடுமைகளால் பெண்கள் எரிக்கப்படும் துயரங்கள், இவற்றை எதிர்த்து நடா

www.padippakam.com

த்துகின்ற பெண்களின் போராட்டங்களைப் பற்றிய நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தன. ஜெர்மனிய மொழியிலமைந்த இத்தகவல் சித்திரத்தை தமிழில் கமலா மொழிபெயர்த்துக் கூறினார்.

நான்காவதாக "சிறுகதை விமர்சனம்" சம்பந்தப்பட்ட கட்டுரை வாசிப்பொன்று இடம்பெற்றது. உமா, சுகன் ஆகிய இருவரும் மேற்கு ஜெர்மனியில் வெளியாகும் சஞ்சிகைகளில் இடபெற்ற சிறுகதைகளை விமர்சனம் செய்திருந்தார்கள். சுகன் "தூண்டில்" சஞ்சிகைகளில் வெளியான சிறுகதைகளை மட்டுமே விமர்சனம் செய்திருந்தார். இவ்விமர்சனமானது மேலெழுந்தவாரியாகவும் அவசர அவசர அவசரமாகவும் மேற்கொள்ளப் பட்டதால் ஆரோக்கியமான விமர்சனப் பார்வை கொண்டதாக அமையவில்லை. உமா சில சிறுகதைகளை விமர்சனத்திற்குள்ளாக்கியிருந்தார். பார்த்திபனின் சிறுகதையொன்றில் பிரச்சார வாடை தென்படுவதாக குறிப்பிட்டார். இந்தக் கருத்து சிறிரங்கன் என்னும் வாசகரால் மறுதலிக்கப்பட்டதை தொடர்ந்து சிறிது நேரம் விவாதத்திற்குள்ளாக்கப்பட்டது. இலக்கியத்தின் நோக்கமே பிரச்சாரம். அவரவர் தத்தமது கோணங்களிலிருந்து தான் விமர்சனப் பார்வைகளை முன் வைக்கிறார்கள் எனக் குறிப்பிட்ட சிறிரங்கனது கருத்துக்களில் சிறிது முரண்பட்ட திரு. நித்தியானந்தன், இலக்கியம் பிரச்சாரமாகலாம். அதே வேளை பிரச்சாரம் இலக்கியமாகாது சிறுகதைக்கு இதுதான் மரபென்று எதுவும் கிடையாதென குறிப்பிட்டார்

**புதுக் கவிதையின் தோற்றம் ஏராளமான புதுக்கவிதைகளையும், புதுக் கவிஞர்களையும் உருவாக்கினாலும் அவற்றில் எத்தனை புதுக்கவிதைகளாக இருந்தன என்பது கேள்விக் குறியான விடயம்தான்.**

ஐந்தாவது நிகழ்ச்சியாக, "புதுக்கவிதையும் புதிய பிரக்ஞையும்" என்கிற தலைப்பில் திரு. குமரனின் உரையாற்றினார். "புதுக் கவிதையின் ஆரம்பகாத்தை சரியாக கோடு கிழித்துக் காட்டுவது கடினம். பச்சை மூர்த்தியின் காலகட்டங்களில்தான் புதுக்கவிதை வடிவம் உருவாகியது. அறுபதுகளில் ஆரம்ப புதுக்கவிதை இலகுபடுத்தப்பட்ட, எளிமையான, ஜனரஞ்சமாக இருந்தது.

மேத்தா, அப்துல் ரஹ்மான் போன்றோரிடம் வித்தியாசமான பார்வையும், மார்க்சிய கண்ணோட்டமும் கொண்டவையாக இருந்தன. புதுக்கவிதையின் தோற்றம் ஏராளமான புதுக்கவிதைகளையும், புதுக் கவிஞர்களையும் உருவாக்கினாலும் அவற்றில் எத்தனை புதுக் கவிதைகளாக இருந்தன என்பது கேள்விக் குறியான விடயம்தான். தமிழ்நாட்டில் ஜனரஞ்சகமான புதுக்கவிதைகள் வெளியான போது ஈழத்தில் புதுக் கவிதையின் போக்கு வித்தியாசமாக இருந்தது. ஆரம்பத்தில் மஹாகவியின் கவிதைகள் வித்தியாசமாகவும் பேச்சோசை பண்புகள் கொண்டவையாகவும் இருந்தன. இது ஈழத்தில் வெளியான கவிதைகளில் சிறப்பம்சமாக இருந்தது. இதே போல் பின்னர் வந்த சேரனின் கவிதைகளில் பேச்சோசைப் பண்பு இருந்த அதேவேளை யதார்த்தமும் எளிமையும் இருந்தன.

படிப்பகம்

www.padippakam.com

புலம் பெயர்ந்த மக்களிடையே உருவான கவிதைகள் பல புதிய பிரக்ஞைகளை தந்துள்ளன. மனிதன் தாய் நாட்டைவிட்டு புகல் நாட்டில் வாழும் போது ஏற்படும் புதிய சூழல்களும் மாற்றங்களும் புதிய பிரக்ஞைகளை உருவாக்குகின்றன. இவற்றை நாம் மூன்று வகையாக பிரித்துப் பார்க்கலாம்.

(அ). தாம் வாழும் நாட்டை சூழ்நிலையோடு தாய்நாட்டை பொருத்திப் பார்ப்பது.

(ஆ). கூடுலான அளவிற்கு தாய்நாட்டைவிட்டு புகல் நாட்டில் வாழும்போது தாய்நாட்டின் மீதான நேசம் அவலத்தை பிரதிபலிப்ப அமைகிறது.

(இ). பெண்ணிலைவாதக் கருத்துக்கள்.

புகலிட மக்களிடையே உள்ள புதுக்கவிதைகளில் "துருவச்சுவடுகள்" கவிதைத் தொகுப்பு புதிய பரிணாமத்தை கொடுத்துள்ளது. இவை தவிர கல்யாணி, சிவம். அருந்ததி ஆகியோரது கவதைகளை குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக உள்ளது.

ஜெயபாலனின் கவிதைகளில் நாட்டைப் பற்றிய ஏக்கம் கழிவிரக்கமாக தென்படுகிறது. சொந்த நாட்டு அவலங்களில் இருந்து தப்பி வரும் இளைஞனிடம் புகல் நாட்டின் ஏக்கம் முனைப்பு பெறுகின்றது. தம்பாவின் கவிதைகளில் மானிடம் வெல்லும் என்கிற தன்னம்பிக்கை புலம் பெயர்ந்து போன உணர்வுகளோடு தென்படுகிறது. மைத்ரேயின் கவிதைகளில் மரபுரீதியான தாய்க்கும் பெண்ணடிமையை களைய நினைக்கும் மகளுக்குமிடையே நடக்கும் உரையாடலில் பேச்சோசைப் பண்பு தெரிகின்றது நான்கு திசைகள் விரிந்த பின்னும் நான்கு குணங்களுக்குள் அடைபட்டுக் கிடைக்கிறாயே என்கிற வரிகள் புலப்பெயர்வின் புதிய சூழலோடு புறப்பட்டு வருகின்றன. உண்மையில், புலம் பெயர்ந்தவர்களின் புகலிட இலக்கியங்களில் புதுக்கவிதை என்பது தமிழில் புதிய பிரக்ஞையை தந்துள்ளது. திரு.குமரனின் உரையின் பின்னர் ஆறாவது நிகழ்ச்சியாக "தேடலும் ஐக்கியமும்" என்னும் தலைப்பில் சுவடுகள் சஞ்சிகை சார்பில் கலந்து கொண்ட குமார் உரையாற்றினார். அவரது உரையின் போது இலக்கியம் என்பது மக்கள் தொடர்பான கோட்பாட்டு சார்பானதா என்பது தீர்க்கப்படாத பிரச்சினையாவுள்ளது. எமது வாழ்நிலை சார்பாகவே இக்கருத்துக்கள் உருவாகின்றன.


புகலிட இலக்கியமானது ஏக்கங்களிலிருந்தும், விரக்தியிலிருந்தும் ஈழத்தின் அவலங்களிலிருந்தும் அமைந்திருக்கிறது. எனகுறிப்பிட்ட அவர் தேடலும் ஐக்கியமும் என்கிற கருத்தை புகலிட இலக்கிய மூலமாகவே முன்வைக்கலாம் என கருத்து தெரிவித்தார். இன்றைக்கு எம்முன் எழுப்பப்பட்டுள்ள இக்கருத்தின் அவசியத்தை எத்தனை பேர் கருத்திற் கொண்டார்கள் என்பது கேள்விக் குறியான விடயமே. "தேடலும் ஐக்கியமும்" புகலிட இலக்கியங்களில் முக்கியமாக முன்னெடுக்கப்படவேண்டிய கருத்தாகவே இன்றைக்கு எல்லோர் முன்னிலையிலும் முன்வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 36 பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# காலச் சுவடுகள்




நிகழ்கால யதார்த்த நிகழ்வுகளை கடந்தகால வரலாற்றுச் சம்பவங்களுடனான கருத்தோட்டங்களுடன் ஒப்பிட்டு சமூகப் பிரச்சினைகளை நாடகங்கள் மூலம் வெளிக் கொணருவதில் பீலவெல்ட் (Bielefeld) நாடகக் குழுவினரின் "காலச் சுவடுகள்" என்னும் நாடகம் முன்மாதிரியாக அமைந்துள்ளது.

கிறேவெல்ட் (Krefeld) நகரில் அண்மையில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பின் போது இந்நாடகம் இறுதி நிகழ்ச்சியாக இடம் பெற்றிருந்தது இயந்திரமயமான மேற்கத்தைய சூழலில் இவர்களின் இப்புதிய முயற்சி புலம் பெயர்ந்தோரின் கலை முயற்சிகளில். ஒரு புதிய பரிணாமத்தை உள்வாங்கியிருக்கிறது எனலாம்.

முன்னனுபவம் இல்லாத நிலையில் ஆக்கபூர்வமான விமர்சனங்களை எதிர்பார்த்து இந்நாடகத்தை மேடையேற்றுகிறோம் என தமது முன்னறிவிப்பின் போது குறிப்பிட்டிருந்தார்கள். மேடை, ஒலி, ஒளி போன்ற வசதிகள் எதுவுமின்றி அவர்கள் நாடகத்தை இலக்கியச் சந்திப்பில் நடாத்த முன்வந்ததிலிருந்து அவர்களது விடா முயற்சியையும், சமூகப் பிரச்சினைகளையும் வெளிக் கொணர வேண்டுமென்கிற சமூகப் பிரக்ஞையையும் கண்டு கொள்ளக் கூடியதாக இருந்தது.

நாட்டுக் கூத்து, ஒப்பாரி, தாலாட்டு, உரையாடல் போன்ற அனைத்து வடிவங்களை ஒரே நாடகத்தில் கையாள முயன்றிருப்பதுடன் தாழ்த்தப்பட்ட சமூகம் ஒன்றைச் சேர்ந்த குடும்பத்தின் வாழ்வையொட்டிய பிரச்சினைகளை நாடகக் கதையின் கருவாகக் கொண்டிருப்பது முற்றிலும் புதிய முயற்சியாக அமைந்திருந்தது.

நாடகக் கதை முக்கியமாக நான்கு அம்சங்களை வெளிப்படுத்தியிருந்தது.

(அ) தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த முதிய தலைமுறையினர் உயர்சாதியினரின் ஒடுக்குமுறைகளுக்கு பணிந்துபோவது.

(ஆ) அச்சமூகத்தைச்சேர்ந்த இளைய தலைமுறையினர் ஒடுக்குமுறைகளுக்கெதிராக போராட முற்படுவது.

படிப்பகம்

www.padippakam.com

(இ) விடுதலைப் போராட்டத்தின் போது இடம் பெற்ற காட்டிக் கொடுப்புக்கள்.

மருகிக் கொண்டு போகும் எமது பாரம்பரிய கலைவடிவங்களை ஒரே நாடகத்திலேயே வெளிக் கொணர முற்படுவது சிரமமானதொன்றாகும். பொதுவாக வடிவங்களை அடிக்கடி மாற்றும் போது பார்வையாளர்கள் கதையின் உயிரோட்டத்தைப் புரிந்து கொள்ள சிரமப்படுவதுமுண்டு. இதே வேளை பாத்திரங்களின் முகபாவனை முக்கியமாக அவதானிக்கப்படவேண்டியதாகும். இந்த இரு தன்மைகளும் காலச்சுவடுகள் நாடகத்தில் தென்படுவதைக் காணகூடியதாக இருந்தது.

பொதுவாக எடுத்துக் கொண்ட கதையின் கருவிற்கேற்ப சம்பவங்களை இணைக்கும்போது அந்நியமான நிலை தோன்றுவதை தவிர்த்துக்கொள்ளுதல் அவசியமானதாகும். நாடக இலக்கியங்களிலும், நாடக்தயாரிப்புக்களிலும் பாத்திரங்கள், சம்பவங்கள் ஆகியவற்றின் வளர்ச்சி மிகவும் ஆற்றல் மிகுந்தும், அறிவு பூர்வமாகவும் இசைவானதாகவும் இருக்க வேண்டியது அவசியமானதாகும். நாடகத்தின் கதையின்கரு இறுக்கமானதாக இறுதிவரை அமைந்திருக்கவேண்டும். காலச்சுவடுகள் நாடகத்தில் இரண்டு விதமான கதையோட்டம் தென்படுவதை காணக் கூடியதாகவுள்ளது. பாரம்பரிய கலை வடிவங்களை மீளக் கொண்டு வரும் பட்சத்தில் அவற்றின் உயிரோட்டங்களை புரிந்து கொள்ள வேண்டும். கடந்தகாலங்களில் உழைக்கும் மக்களின் ஒளிவு மறைவற்ற எண்ணங்களை பிரதிபலிப்பதாகவும் அவர்கள் ஒடுக்கு முறைக்குள்ளான போது ஏற்படும் உணர்வுகளை சித்தரிப்பதாகவும், வேலை செய்து களைப்புற்றிருந்த நேரத்தில் மகிழ்விக்கவும் அவர்களால் உருவாக்கப் பட்ட இக்கலைவடிவங்கள் இன்று இந்த நாடகக்குழுவினரால் சமூக முரண்பாடுகளை வெளிக்கொணரும் கலை வடிவங்களாக புலம் பெயர்ந்து வாழும் ஐரோப்பிய தேசத்தில் இடம்பெறுவது பாராட்டப்படவேண்டியதே. இக்கலை வடிவங்களை செழுமைப்படுத்த சமூகப் பிரக்ஞை உடைய அனைவரும் முன்வரவேண்டுமென்பதே தற்போதுள்ள தேவையுமாகும்.

மாருதி

---

தொடர்ச்சி....

**லெனினின் வேண்டு கோளால் அவள் மன்னிக்கப் பட்டாள் என வதந்திகள் இன்னும் இருந்து வருகின்றன. கொலை முயற்சிக்குப் பின்னரும் பல வருடங்கள் கழித்து அவளைச் சிறையில் கண்டதாகப் பலரும் கூறியுள்ளனர்.**

**இந்த வதந்திகள் லெனினின் தார்ப்பரிய குணத்தைப் பிரதிபலித்தன. உண்மையில் லெனினால் அப்பயங்கரவாாதப் பெண்ணிற்காகத் தலையிட முடியவில்லை.**

**அவள் லெனினுக்குத் தனிப்பட்ட எதிரியாக இருக்கவில்லை. ஆனால் சோவியத் அமைப்பிற்கும், கம்யூனிச சமூகத்திற்கும் அவள் எதிரியாக இருந்தாள்.**

**நன்றி: தகவல்கள் SW**

படிப்பகம்

# கிழக்கும் மேற்கும்

இந்தப் பகுதி கிழக்கு-மேற்கு ஜேர்மனி இணைவு குறித்து வாசகர்களின் கருத்துக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இணைவு குறித்தான உங்கள் கருத்துக்களை இந்தப்பகுதிக்கு எழுதி அனுப்புங்கள்

ஆ.கு

இரண்டாம் உலகயுத்தத்தின் பின் கிழக்கு மேற்காக துண்டாடப் பட்ட ஜெர்மனி ஐம்பது நீண்டவருடங்களின் பின் இணைந்து ஒரு நாடாக வழிபார்த்துக் கொண்டிருக்கும் நேரமிது. ஏற்கனவே சொல்லப்பட்ட இந்த சோதிடம் உண்மையாக நடைமுறைக்கு வரகிட்டத்தட்ட அரைநூற்றாண்டு காலம் தேவைப்பட்டுள்ளது. ஒரு நாடு ஒன்றாய் இருந்து பின்பு பிரிக்கப்பட்டு இப்போது ஒரு நாடாக இணைவதில் பெரும் இழுபறிகளை இரு நாடுகளும் சந்தித்துக் கொண்டிருக்கின்றன.

இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன் இருந்த எல்லைகளுடன் இரு ஜெர்மனிகளும் இப்போது இணைவதென்பது சாத்தியமல்ல. மேலும் இணையப்போகும் ஜெர்மனிக்கும் அதன் கிழக்கத்திய நாடுகளுக்குமான எதிர்கால புதிய உறவுகளுக்கும் ஆபத்து ஏற்படலாம்.

ஆயிரம் ஆண்டுகாலமாக இருந்த ஜெர்மனியின் சுயாதீனத்தை அது அடையுமானால் எதிர்கால உலகத்திற்கு அது கடுமையான அச்சுறுத்தலான அமையவாம். அது மட்டுமின்றி ஐரோப்பிய கண்டத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு தற்சமயம் ஜெர்மனியால் கிடைக்கும் பங்களிப்பும் எதிர்காலத்தில் இல்லாது போய் விடும்.

எது எப்படியாயினும், ஒரே மொழியையும், ஒரே கலாச்சாரப் பண்பாடுகளையும் கொண்டிருக்கும் மக்கள் சேர்ந்து வாழவே விரும்புவர். அதற்கான முடிவை கிழக்கு ஜெர்மனி மக்கள் மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலின் போது மிகத் தெளிவாக காட்டிவிட்டார்கள். இத்தேர்தலில் ஒருங்கிணைப்புக்கு தீவிர ஆதரவாக இருந்த வலதுசாரிக் கட்சிகளின் கூட்டணியை அவர்கள் பெரும்பான்மையாக ஆதரித்தனர். இதுவரை காலமும் கிழக்கு ஜெர்மனியின் தனிப்பெரும் கட்சியாக விளங்கவந்த கம்யுனிஸ்ட் கட்சி இத்தேர்தலில் பதினாறு சதவீதமான வாக்குகளை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

17 ஜுன் 1953ல், கிழக்கு ஜெர்மனி மக்கள் இரு ஜெர்மனிகளும் இணைய வாக்களிக்கமுயன்றனர். ஆனால் அன்றைய நிலமையும் சூழலும் முற்றிலும் வேறாக இருந்தமையால் சுதந்திரமாக அவர்களால் வாக்களிக்க முடியாது போய்விட்டது.

மீண்டும் பேர்லின் இணையும் ஜெர்மனியின் தலைநகராக நாம் இந்த நுற்றாண்டின் இறுதிவரை அல்லது அதற்கு மேலும் சிறிது காலம் நாம் காத்திருக்க வேண்டும். இது வெளிப்படையான ஒன்று. சோவியத் யூனியனின் "பெரெஸ்ட்ரோய்க்கா" சோவியத்யூனியனில் சரியாக செயற்படாது போயினும் உலகம் முழுக்க அதன் தாக்கம் பரவலாக ஏற்பட்டு வருவதை காணக்கூடியதாகவுள்ளது. ஆனாலும் கிழக்கு மேற்கு எல்லைகளில் அதன் வீரியம் குறைந்தே காணப்படுகின்றது. நேட்டோ, வார்ஸோ ஒப்பந்தக்களுக்கிடையிலான உயிரற்ற போட்டிகளை அதனால் அகற்ற முடியாதிருப்பதை நல்ல உதாரணமாகக் கொள்ளலாம். கிழக்கு ஜெர்மனியில் ஏற்படும் மாற்றமானது சிலசமயம் அதற்கு உதவலாம்.

தொடர்ச்சி 36. பக்கம்



www.padippakam.com

www.padippakam.com



# லெனினை கொல்ல முயன்ற பெண்

ப.ஜனகன்

1918ம் ஆண்டு ஆகஸ்ட் 30ந் திகதி நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் மொஸ்கோ மைக்கல்சன் வேலைத்தளத்தில் லெனின் பேச்சைக் கேட்டு கொண்டிருக்கிறார்கள். அவர் தனது உரையை முடித்தபோது துப்பாக்கி ரவைகள் கூட்டத்திலிருந்து அவரை நோக்கிப் பாய்ந்தன. லெனின் தடுமாறினார். "எங்கே காயப்பட்டீர்கள்" என அருகே நின்ற செம்படையை சேர்ந்த ராணுவவீரன் லெனினை பார்த்து வினவ, "எனது தோள்ப் பட்டையில்" என பதிலளித்த லெனின் அமைதியாக காணப்பட்டார்.

லெனினுக்கருகே ஓடி வந்த கட்சி பிரமுகரான, கோன்சாறோவ் ராணுவவீரனுடனும் சாரதியுடனும் சேர்ந்து லெனினை வாகனத்தில் ஏற்றி பின்னிருக்கையில் இருக்கவைத்தார்.

வாகனம் கிரெம்ளினை நோக்கி விரைந்தது. அவர்கள் செபுக் கோவ் வாசலை அடைந்தபோது லெனின் தனது தோள்ப் பட்டை வலிப்பதாகக் கூறி தனது மேல்"கோர்ட்டை" கழட்டி விடுமாறு கேட்டார். அவருடன் இருந்தவர்கள் "கோர்ட்டை" அகற்றியபோது இரத்தத்தால் அவரது மேலங்கி நனைந்திருப்பதைக் கண்டார்கள். அதனைப் பார்த்ததும் அண்மையிலுள்ள கன்னிமாடத்திற்கு சென்று முதலுதவிச் சிகிச்சை பெறலாம் என ஆலோசனை தெரிவிக்க, "இல்லை, இல்லை நேராக கிரெம்ளினுக்கு போங்கள்" என லெனின் கூறினார்.

வாகனம் கிரெம்ளின் வாசலை அடைந்தபோது சாரதி லெனின் வந்திருக்கிறார் என பாதுகாவலரை பார்த்துக் கூறிவிட்டு தலைமையகத்தினை நோக்கி வண்டியைச் செலுத்தினான்.

லெனினை வாகனத்திலிருந்து இறங்க கூட வந்தவர்கள் உதவி செய்தனர். "மேல் மாடிக்கு உங்களை அழைத்துச் செல்ல நாங்கள் உதவி செய்யலாமா"என சாரதி கேட்க, "நன்றி

படிப்பகம்

www.padippakam.com

"புரட்சிகர ரஸ்யாவின் அரசியல் நிலைமைகள் அப்போது புயல் வீசிக் கொண்டிருந்தன. பத்திரிகைத் துறைக்கும் பிரச்சாரத்திற்கும் பொறுப்பாக இருந்த வோவோடாஸ்கி, என்னும் பீட்டோகிறட் அதிகாரி ஜூன் 20ந் திகதி படுகொலை செய்யப்பட்டிருந்தார்".

நான் சமாளித்துக் கொள்வேன்" என பதிலளித்த லெனின் மேலங்கியை கழுட்டிவிடுமாறு கேட்டார்.

போல்சேவிக் கட்சியைச் சோநத பொன்ஞ் புறுயேவிச், சகலவற்றையும் பொறுப்பேற்றுக் கொண்டு லெனினை படுக்கையில் படுக்க வைத்தார்.

பத்துக்கு மேற்பட்ட வைத்தியர்கள் லெனின் படுக்கைக்கருகே நின்று அவசர ஆலோசனை செய்தார்கள் லெனினின் இடதுபக்க காறை எலும்பிலும், நெஞ்செலும்பருகேயும் இரு ரவைகள் துளைத்திருந்தன.நெஞ்செலும்பருகே பாய்ந்திருந்த ரவை கழுத்தையும், இடதுபக்க சுவாசப் பையையும் துளைத்திருந்தது.

மூச்சுவிடுவதற்கு சிரமப்பட்டுக் கொண்டிருந்த லெனின் இருமிய போது இரத்தம் வெளிப்பட்டது. அவரது உடலில் பாய்ந்த ரவைகளை எடுத்தால் அதிக ரத்தப் பெருக்கு ஏற்பட்டு உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என அவருடன் இருந்த வைத்தியர்கள் தீர்மானித்தார்கள்.

முதலில் அவர் ஆபத்தான நிலையில் இருக்கிறார் என அறிவித்த வைத்தியர்குழு பின்னர் அவரது உடலில் முன்னேற்றத்தை கண்டார்கள்.

ஆகஸ்ட் மாதம் 31ந்திகதி மாலை வெளியான செய்தியின்படி அவர் ஆபத்தான கட்டத்தை தாண்டியுள்ளாரென அறிவிக்கப்பட்டது.

இந்த இடத்தில் சில விடயங்களை முக்கியமாக கவனத்திற் கொள்ளவேண்டும். புரட்சிகர ரஸ்யாவின் அரசியல் நிலமைகள் அப்போது புயல் வீசிக்கொண்டிருந்தன.பத்திரிகைத் துறைக்கும் பிரச்சாரத்திற்கும் பொறுப்பாக இருந்த வோவோடாஸ்கி, என்னும் பீட்டோகிறட் அதிகாரி ஜுன் 20ந் திகதி படுகொலை செய்யப்பட்டிருந்தார். ஜுலை ஆரம்பத்தில் போல்சேவிக் கட்சி, சமூகப் புரட்சியினரின் கலகத்தை மொஸ்கோ, றைபின்ஸ்க் முறோம் ஆகிய இடங்களில் அடக்கிவிட்டிருந்தது. ஆகஸ்ட் 2ந் திகதி பிரித்தானிய,பிரஞ்சிய, அமெரிக்க படைகள் பலவந்தமாக ஆர்சென்கெல்ஸ்க் ஆகிய இடங்களில் வந்திறங்கியிருந்தன. ஆகஸ்ட் 4ந் திகதி பாகு என்னுமிடத்தை பிரித்தானிய படைகள் கைப்பற்றிக் கொண்டன.

லெனின் மீதான கொலை சம்பந்தபட்ட விசாரணையை "செக்கா" புலனுய்வு உடனடியாக மேற்கொண்டது. கொலை முயற்சியை மேற்கொண்டதாக கருதப்பட்ட பெண் சந்தேகத்தின் பேரில் மைக்கல்ஸ்வேரக் ரானுவமுகாம் அலுவலகத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தாள். அவளை நேராக லுபியன்கா என்னுமிடத்திற்கு கொண்டு வருமாறு "செக்கா "வின் உதவி தலைவர் ஜானிஸ் பீட்டர்ஸ் கட்டளை இட்டார்.

படிப்பகம்

www.padippakam.com

செப்டெம்பர் 3ந் திகதி வரையி லான நான்கு நாட்களுக்குள் புலன் விசாரணைக் குழு நாற்பது நேரடிச் சாட்சியங்களைப் பதிவு செய்தது. செப் டெம்பர் 2ந் திகதி, மைக்கல்சன்பேர் க்கில் நடைபெற்ற கூட்டத்தில் கல ந்து கொண்ட தொழிலாளியால் கொ லை முயற்சிக்கு பாவிக்கப்ட்ட துப்பா க்கி மைக்கல்சன்பேர்க் தளத்தில் கண்டெடுக்கப்பட்டது. கொலை முயற் யின் முக்கிய தடயங்களாக கருதப்ப ட்ட இத்துப்பாக்கியும் நான்கு தோட் டாக்களும் பிரதேச ராணுவ அலுவல கத்தில் ஒப்படைக்கப்பட்டன.

"செக்காவைச்"சேர்ந்த குர்ஸ்கி, கப்ளான் என்றழைக்கப்பட்ட அந்தப் பெண்ணை முதலில் விசாரணை செய் தார். விறைப்பாக முகத்தை வைத்தி ருந்த அவள் வேட்டைக்குதயாராகும் மிருகம் போல் இருந்தாள்! நறுக்கென்று இருந்த அவளது பதில் கள் எதுவித தகவல்களையும் தருவ தாக இருக்கவில்லை.

"எங்கிருந்து ஆயுதத்தை பெற்றாய்?".

"தேவையற்றவிடயம்"

"யார் உனக்கு ஆயுதத்தை தந்தது?"

அவள் பதிலேதும் சொல்ல வில்லை அவளிடம் மாற்றம் எதுவும் இல்லாது போகவே குர்ஸ்கியைத் தொடர்ந்து பேற்றோர்வ் கேள்விகளைக் கேட் டார்.

"யாராவது உனக்கு உடந்தையாக இருந்தார்களா?".

"இல்லை".

நீ ஏதாவது அமைப்பினுடனும் தொட ர்பு வைத்திருக்கிறாயா?.

"விளக்கம் தேவையில்லை".

"இந்தக் கொலை முயற்சிக்கு யார் பின்னணியில் இருந்தார்கள்?".

"எனக்குத் தெரியாது".

அவளுடைய கைப்பையில் இருந்து கண்டெடுக்கப்பட்ட "மிற்றோ போல் ஸ்காயா"என்னும் பெயரில் இருந்த அடையாள அட்டையும், பிரயாணச்சீ ட்டும் அவளுடையதாக இருக்கவில் லை.

"லெனினைக் கொலை செய்யச் சொல் லிய யார் உனக்கு சொன்னார்கள்?" பீட்டர்ஸ் கேட்டார்.

பதிலளிக்க மறுத்த அவள், தலையை ஒருமுறை குலுக்கியபோது நீண்டமயி கள் முகத்தை மூடிக் கொண்டன. பீட் டர்ஸை தொடர்ந்து சுவெர்ட் லோவ் விசாரணையைத் தொடர்ந்தார்.

"நான் இந்த நாட்டின் மேல் மட்ட தீர்மானங்களை நிறைவேற்றும் பிர தம அதிகாரி. நீ பேசும்படி கட்டளை யிடுகிறேன். இந்தச் செயலை செய்யு ம்படி யார் உன்னை அனுப்பியது?. நீ ஒரு சமூகப் புரட்சிவாதியா?. பேசு!"

அவள் இப்போது பேசினாள்.

"நான் ஜார் மன்னனது சிறைகளில் இருந்தவள். அங்கிருந்த காவலாளிக ளாலேயே என்னிடமிருந்து எதையும் பெறமுடியவில்லை. உன்னால் என்னி டமிருந்து எந்த தகவலையும் பெறமுடி யாது. ஆனால் ஒன்று நான்தான் லெ னினைச் சுட்டேன். இதுதான் உண் மை".

உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்த முடியாதவளாக நாற்காலியை விட்டெ ழுந்த அவள், மனநோயாளி போல் காணப்பட்டாள். "ஆம், நான்தான் அதைச் செய்தேன். நான் அவரைக் கொல்லக் கூடாதா?"

www.padippakam.com

அவ்வியக்கத்திலிருந்து அவள் மேற்கொண்ட புரட்சிகர நடவடிக்கைகள் அவளை சிறைக்கு அனுப்பின. அங்கிருந்த சிறைக்கைதிகளின் போதனையின் பேரில் அவள் "அனாகிஸ்ற்" அமைப்பிலிருந்து விலகி சமூகப் புரட்சி வாதக்கட்சியின் வலது அணியில் சேர்ந்து கொண்டாள்"

ஒரு நாளுக்குப்பின், ஆகஸ்ட் 31ந் திகதி. கிங்கிஸ்செப் என்னும் அதிகாரி இந்த விசாரணைக் குழுவில் சேர்ந்துகொண்டார். அவர் முன்னர் புரட்சிவாதியாக இருந்த வேறா ரற சோவா-போபுஉறொவா என்னும் பெண்ணொருத்தியைக் கண்டு பிடித்தார் மொஸ்கோவில் வசித்து வந்த அவள் காப்ளானை நன்கு அறிந்து கொண்டவள். அவள் மூலம் காப்ளானின் கடந்தகால பின்னணியை அறிந்து கொண்டார்.

காப்ளான் என்றழைக்கப்படும் அவளது பெயர் fவன்னி றொயிட்மன் (Fanny Roidman) ஆகும். அவள் உர்க்றானி என்னும் இடத்தில் பிறந்தவள் நான்கு சகோதரர்களையும் மூன்று சகோதரிகளையும் கொண்ட அவளது குடும்பத்தினர் 1911ம் ஆண்டு அமெரிக்காவிற்குகுடிபெயர்ந்து போனார்கள். கீவ்(Kiev) என்னுமிடத்தில் காப்ளான் என்கிற பெயரில் "அனாகிஸ்ற்" என்னும் தலைமறைவு இயக்கத்தில் அவள் சேர்ந்து கொண்டாள். அவ்வியக்கத்திலிருந்து அவள் மேற்கொண்ட புரட்சிகர நடவடிக்கைகள் அவளை சிறைக்கு அனுப்பின. அங்கிருந்த சிறைக்கைதிகளின் போதனையின் பேரில் அவள் அனாகிஸ்ற் அமைப்பிலிருந்து விலகி சமூகப் புரட்சி வாதக் கட்சியின் வலது அணியில் சேர்ந்து கொண்டாள்.

அக்டோபர் புரட்சி அவளை சிறையிலருந்து விடுதலை செய்தது. அவள் மொஸ்கோவில் முன்னைய தலைறைவாக இருந்த அன்னா பிகிற் என்கிற சினேகிதியுடன் தங்கிக் கொண்டாள்.

ஒருமாதத்திற்குப்பின், இரு மாத விடுமுறையை எடுத்துக் கொண்டு கருங்கடலுக் கருகிலமைந்த முன்னைய அரசியல் கைதிகளிற்கான வைத்திய ஸ்தலத்திற்குச் சென்றாள். பின் கார்கோவ் என்னுமிடத்திற்கு கண்சிகிச்சை ஒன்றிற்காக சென்றாள். 1918 பெப்ரவரி வரை அங்கேயே தங்கிக்கொண்டாள்.

காப்ளானைப் பற்றி அறிந்து கொண்ட ஜன்னி பீட்டரஸ் (புலன் விசாரணை அதிகாரி) அவளை மறுபடியும் விசாரணைக்கு அழைத்தார். இப்போது அவளிடம் மாற்றம் தென்பட்டிருந்தது. அவள் சொன்னவை அனைத்தும் விசாரணையின்போது போபுறொவா சொன்னவற்றை ஒத்திருந்தன ஆனால் அவள் கொலை முயற்சியைப் பற்றி எதுவும் சொல்வதாக இல்லை இந்த செயலுக்கு உடந்தையாக இருந்தவர்களையும், கொலை முயற்சிக்கான பின்னணியையும், துப்பாக்கியை எப்படிப் பெற்றுக் கொண்டாள் என்பதையும் சொல்ல மறுத்தாள்


படிப்பகம்

www.padippakam.com



காப்ளான்

காப்ளானின் கையெழுத்துடன் பீட்டாலனாலும், ஸ்றிபினிக் என்பவராலும் எடுக்கப்பட்ட விசாரணை அறிக்கைப் பதிவுகளை கீழே தரப்பட்டுள்ளது.

குர்ஸ்கி: ஏன் நீ லெனினை கொல்ல முயன்றாய்?.

காப்ளான்: குற்றவாளியென நான் தீர்மானித்ததால்.

குர்ஸ்கி: அவரை எத்தனை தடவை சுட்டாய்?.

காப்ளான்: எனக்கு ஞாபகமில்லை.

குர்ஸ்கி: என்ன பிஸ்டல் நீ வைத்திருந்தாய்?.

காப்ளான்: நான் அதை விபரமாக சொல்லவரும்பவில்லை.

குர்ஸ்கி: இந்தக்கேள்விக்கு நீ பதில் சொல்லமறுத்தால், தயவு செய்து சமராவின் சமூகப் புரட்சிகர தீவிரவாத அரசாங்கத்தைப் பற்றிய உனது கருத்தையாவது சொல்.

காப்ளான்: நான் அதனை முழுமையாக ஆதரிக்கிறேன். ஜெமனிக்கெதிரான யுத்தத்தில் ரஸ்யாவும் திரும்பசேரவேண்டும் என விரும்புகிறேன்.

அடுத்த இருநாட்களும் பீட்டர்ஸ் காப்ளானிடம் இருந்து சரியான ஆதாரங்களைப் பெற கடும் பிரயாத்தனம் எடுத்துக் கொண்டார். அவள் எல்லாவற்றிற்கும் மறுப்புத் தெரிவத்துக்கொண்டேயிருந்தாள்.

குர்ஸ்கி: உண்மையைச் சொல்லு! நீ சொந்த முயற்சியிலிருந்து இதனைச் சொல்லியிருக்க மாட்டாய்.

குர்ஸ்கி புயலானார். அவரிடமிருந்த இயல்பான அமைதி இப்போது இல்லை.

"போய்விடு! நான் உனக்கு எதையும் சொல்லமாட்டேன்" காப்ளான் கோபமாகவே பேசினாள்.

கீழ்வரும் விசாரணைகள் உயர்மட்டநீதிமன்றத்தில் நடைபெற்ற போது சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டவை.

"ரஸ்யாப் புரட்சியின் பேரில் லெனினைக் கொல்வது புனிதமானதென அவள் உறுதியாக இருந்தாள். ரஸ்யப் புரட்சியின் தலைமையை கைப்பற்றுவதே அவளது இயக்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது"

www.padippakam.com

கோனோபிளேவ்: காப்ளான் கோபமுடையவளாகவும், அடிக்கடி மனநோயாளி போலவும் காணப்பட்டாள். சமூகப்புரட்சிகர பயங்கரவாதிகளில் அவளும் ஒருத்தியாக இருந்தாள். ரஸ்யாப்புரட்சியின் பேரில் லெனினை கொல்வது புனிதமானதென அவள் உறுதியாக இருந்தாள். ரஸ்யாப்புரட்சியின் தலமையைக் கைப்பற்றுவதே அவளது இயக்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

இருந்தது.

இதற்கிடையில் காப்ளானின் கூட்டாளிகள் அவளை சிறையிலிருந்து தப்பவைப்பதற்காக ரகசிய இடமொன்றில் ஒன்றுகூடி கதைத்தார்கள். எப்படி அவளை லுபியன்கா சதுக்கத்தில் உள்ள செக்கா சிறையிலிருந்து மீட்பதென திட்டம் தீட்டினார்கள். அவர்களுக்கு எதுவித யோசனையும் புலப்படவில்லை. ஏனினல் சிறைச் சாலையின் அடித்தள அறையிலேயே அவள் வைக்கப்பட்டிருந்தாள். அறையானது பன்னிரண்டு அடி உயரத்திலும், முள்ளுக்கம்பிகளால் மூடப்பட்டதாகவும் இருந்தது. அத்துடன் வாசலிலும் ஜன்னலுக்கருகிலும் காவலாளிகள் இருந்தனர். கிரெம்ளின் கொமாண்டர் மணிக்கொருதடவை சிறைச்சாலையை பார்வையிட்டுக்கொண்டார்.

காப்ளான் சாப்பாடுகளை மறுத்தாள். சிறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தாள். தன்னுடைய விசாரணைகள் முடிந்ததெனவும் பீட்டரை சந்திக்க இனி தேவையில்லை எனவும் அவள் நம்பினாள். ஆனுல் பீட்டர் திரும்ப அவளிடம் வந்தார். நீ



இன்று ஒரு பெண்ணை சந்திக்கப் போகிறாய் என பீட்டர்ஸ் கூற, எனக்கு எந்தவித சந்திப்புக்களும் அவசியமில்லை. நான்தானே குற்றவாளி என ஒப்புக் கொண்டு விட்டேன என காப்ளான் அவரிடம் சொன்னாள். "இல்லை எங்களுக்கு முழு உண்மையும் தெரிந்தாக வேண்டும்" என பீட்டர் கூறிவிட்டு அவளுடைய பழைய சினேகிதியான ரெறசோவாவை அழைத்து வந்தார்.

வாசலில் வந்து ஒருகணம் அசையாமல் நின்ற ரெறசோவா மனதைத் திடப்படுத்திக் கொண்டு காப்ளானைப்பார்த்துக் கேட்டாள்.
"Fவன்னி, நீ எப்படி இங்கு?"
காப்ளான் அமைதியாக இருந்தாள்
ரெறசோவா தொடர்ந்தாள். "நீ மற்றவர்களைப் போல வாழ்ந்திருக்கலாம் யாரையாவது திருமணம் செய்துகொண்டு குடும்பத்துடன் வாழ்ந்திருக்கலாம்". ரெறேசோவாவின் கண்களில் இருந்து கண்ணீர் வெளிப்பட்டது.
"நான் மற்றவர்களைப் போலில்லை" என காப்ளான் அவளிடம் சொன்னபோது குரல் அதிர்வுடனும் வேகமாகவும் காணப்பட்டது.

www.padippakam.com

ரெறசோவா அவளைவிட்டுப் போன பின் காப்ளான மனமுடைந்தவள் போலக் காணப்பட்டாள். இத்தகைய ஒரு நிலையை பீட்டர் அவளிடம் முன்பொருபோதும் காணவில்லை. எதிர்த்துப் பேசும் முன்னைய திராணி கூட அவளிடம் இருக்கவில்லை, பீட்டரால் அவளிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெறமுடியாது போய் விட்டது விரும்பப்படாத, பிள்ளைகளற்ற அந்தப் பெண் இப்போ மரணத்தை எதிர்பார்த்து நிற்கிறாள். ஏன் அவள் லெனினுக்கருகில் வந்து சுட்டிருக்கக்கூடாது?. ஓ அவள் கண் பார்வை குறைந்தவள்! தடித்த திரையொன்றின் பின் நின்று லெனினை அவள் மூன்று முறை சுட்டிருக்கிறாள். லெனின் கிழே சரிய அதைக் கண்டு அவரது வாகனசாரதி இறங்கி வர அவனது காலருகே துப்பாக்கியைப் போட்டுவிட்டு அவள் பீதியுடன் கலைந்தோடிய கூட்டத்துடன் சேர்ந்து ஓடினாள். அவளுக்காக ஒரு வாடகை வண்டி ஒன்று அருகிலுள்ள ஒழுங்கையொன்றில் காத்து நின்றதை மறந்து போனாள். ஏன், ஏன் அவள் வெடிகுண்டை பாவித்திருக்கக் கூடாது?. தனது சகாக்களின் ஒவ்வொரு கூட்டத்திலும் அவள் இதைத் தான் வலியுறுத்திக் கொண்டு வந்திருக்கிறாள். ஆனால் பெரும்பாலான அவளது சகாக்கள் கைத் துப்பாக்கியை பயன்படுத்துவதையே விரும்பினார்கள். (பின்னர் செக்காவைச் சேர்ந்தவர்கள் அவளதுவீட்டில் வெடி குண்டொன்றைக் கைப்பற்றினார்கள்)

இனி எதுவித எதிர்பார்ப்பும் தனக்கில்லை என அவள் தெரிந்து கொண்டாள். நினைத்திராத, அவளுக்கேற்படப்போகும் மரணமும் நகர்ந்துகொண்டிருக்கும் நம்பிக்கையின்மையும் அவளது தவறாகவே இருந்தன.

இறுதியாக பீட்டர்ஸ் அவளுடன் கதைத்தபோது, மத்திய மரண தண்டனை நிறைவேற்றுக்குழுவின் செயலாளரான வார்லாம் அவனேசோவ், அவளது மரணதண்டனைஅறிக்கையை வாசிக்குமாறு மால்கோவிடம் கையளித்தார். செப்டெம்பர் நாலாம் திகதி அவள் சுடப்படவேண்டுமென தீர்மானிக்கப் பட்டது.



சுடப்பட்டபோது லெனின் அணிந்திருந்த 'கோட்'

செப்டெம்பர் 4ந் திகதி. 4 மணி மால்கோவ் கிரெம்ளினிலுள்ள துப்பாக்கி காவலர்களை தெரிவு செய்து காப்ளானை கூட்டிச்சென்றார். மரண அறிக்கை வாசிக்கப் பட்டது. துப்பாக்கிகள் முழங்கின.

அக்டோபர் 27ந் திகதி. "செக்கா" வாரஇதழ் அவளது மரண அறிவிப்பை வெளியிட்டது.

தொடர்ச்சி 15 பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# சஞ்சிகைகளும் தேடலும்

இனியவன்

கடந்த சில வருடங்களாக ஐரோப்பா மற்றும் கனடா ஆகிய நாடுகளிற்கு புல ம்பெயர்ந்துள்ள ஈழத்தமிழ் மக்கள் மத் தியிலிருந்து கலை, இலக்கிய, அரசியல் சஞ்சிகைகள் பல வெளிவந்து கொண்டிரு க்கின்றன. புலம்பெயர்ந்த எமது மக்க ளின் புகல்நாடு, தாய்நாடு என்கிற இர ட்டை நிலை காரணமாக இவ் வெளியீடு களும் மேற்படி இருநிலைகளையும் தாங் கிவெளிவருகின்றன.

இவற்றில் பெரும்பாலான சஞ்சிகை கள் தமிழ்த்தேசிய விடுதலைப்போராட் டத்தின் நிகழ்வுகள், தேக்கங்கள் கார ணமாக ஏற்பட்ட பாதிப்புக்களை கவன த்திற்கொண்டு "தேடல்"என்கற பாதை யை முன்வைத்துள்ளதாகவும், இன்னும் சில சஞ்சிகைகள் கலை, இலக்கியம் ஊடாக ஐக்கியம் என்கிற நிலையில் "தேடல்" என்கிற பாதையை முன்வைப் பதாயும் குறிப்பிட்டுள்ளன.

இந்நிலையில்தான் இப்பத்திரிகைகள் "தேடல்" எனக்கூறும் விடயம் தொடர் பாகஎம்முன் கேள்வி எழுகிறது.

தாய்நாடு - புகல் நாடு எனற இர ட்டை நிலையில் நிற்கும் இவர்கள் நிற்கும் இவர்கள் தமது தாய்நாட் டின் நிலைகளை பின்னடைவுகளை கணக்கிலெடுத்து அதுசம்பந்தப்பட்ட காரணங்களை தேடி எமது போராட் டத்தின் அடுத்த கட்ட நகர்வுகள் தொடர்பாக தமது சிந்தனையை முன் வைத்து அதற்கான தேடலை மேற் கொள்ளவுள்ளனரா? அல்லது புகல் நாட்டில் தமது எதிர்கால வாழ்வு நிலை தொடர்பான மூலகாரணிகளை தேடவுள்ளனரா என்ற கேள்வி முன் னெழுகிறது.

ஈழத்த்மிழ்தேசிய விடுதலைப்போரா ட்டத்தில் இன்று தேசிய சக்திகள் உச் சம் பெற்ற அளவிற்கு வர்க்க சக்திகள் உச்சம் பெறவில்லை. மாறாக வர்க்க சக்திகள் என தம்மை கூறிக்கொண்டவ ர்கள் கூட தமது தேசிய விழுமியங்க ளை விட்டு வெளியில் வரவில்லை.

கடந்த காலங்களில் இச் சக்திகள் தொழிலாளர் ஜனநாயகத்திற்கும், பூர்சு வா மிதவாதத்திற்கும் இடையே ஊச லாடியதால் இவர்களது வர்க்கத் தன் மையற்ற அரசியல் குறித்த எல்லாத் தத்துவங்களும் அப்பட்டமான, அபத்த மாகவே சென்றுவிட்டது. குறிப்பாகச் யசால்லப்போனால், ஈழத்தில் எம்மத்தி யில் மார்க்சிய கருத்துக்கள் சிந்தனை ரீதியாக வந்தடைந்தளவு, எமது பிரதே சத்தின் சமூக பொருளாதார ரீதியான பார்வையின் அடிப்படையில் உருப்பெருத நிலையாலேயே இந்த வர்க்கத் தன்மை யற்ற அரசியல் நிலமைக்கு காரணமாகி யது.

தமிழ்த் தேசிய விடுதலைப் போரா ட்டம் 1983ல் தேசிய வீச்சுக்கு உட்பட் டபோதும் சரி, அந்நிய ராணுவத்தின் தலையீட்டின் போதும் சரி, இன்றும் சரி மார்க்சிய சிந்தனையயாளர் மத்தியில் தெளிவான பாதை இருப்பதாக தெரிய

படிப்பகம்

www.padippakam.com

வில்லை. இந்நிலைதான் இன்று அகமும் புறமும் வாழும் தமிழ் பேசும் மக்களையும் பீடித்துள்ளது.

புதிய வழிகாட்டலுக்கான எந்த ஒரு செயற்பாடுகளையும் ஜனநாயக வாதிகளும் சரி, மார்கசியவாதிகளும் சரி முன்வைக்கவில்லை. மாறாக இன்றும் இந்தச் சக்திகள் தமக்குள் குழு நிலை செயற்பாட்டையே மேற்கொள்கின்றன. இவர்களது இந்தநிலையானதுவிடுதலைக்கான சரியான பாதையைக் காட்ட முடியவில்லை. எமது பூர்சுவா அமைப்பின் குறைபாடுகளை விளக்கவும் முடியவில்லை. இதனால் தேசிய சக்திகளின் வளர்ச்சி பற்றி அகநிலை புறநிலைக் காரணங்களைக் கூட அவரகளால் கண்பிடிக்கமுடியாமலும், புதிய சமுதாயத்தின் படைப்பாளியாக அமையவல்ல சமுதாய சக்தியைக் கூட சுட்டிக்காட்ட முடியாமலும் இருக்கிகன்றனர்.

இந்த நிலைகளின் பாதிப்பால் புலம் பெயர்ந்த நிலையில் வாழும் எம்மத்தியிலும் சமூகஜனநாயகம்என்கிற ஊசலாட்டத்தால் நாம்பீடிக்கப்பட்டநிலையில் இருப்பதனை உணரக்கூடியதாகவுள்ளது. இவ்வளவு காலமும் மார்க்ஸியத்தின் போதனைகளை போராட்டத்தின் புரட்சிகர தத்துவத்திற்குரிய உறுதிவாய்ந்த அடித்தளமாக கருதிய பலர் இன்றைய கிழக்கைரோப்பிய நாடுகளினது மாற்றங்களுக்கான காரணங்களை சரியாக ஆய்வு செய்யாது மார்க்ஸியம் முற்றிலும் குறைபாடானவை எனவும், பழமையானவை எனவும் குரல் எழுப்புகின்றனர்.

இன்று எம்மில் சமூக ஜனநாயக வாதிகளாக தம்மைக் காட்டிக் கொண்டு சமூக ஜனநாயக கொள்கை முழக்க ஏடுகளை வெளியிட்டு முன்வரும் எவரும் ஈழத்தின் சமூக ஜனநாயக வாதிகளின்

ஏனைய பலரின் கவனத்தையும் ஆட்கொண்டு வரும் எமது பிரச்சினைகள் தொடர்பாக தமதுபோக்கு என்னவென்பதை துல்லியமாக வரையறுத்து கூறியாகவேண்டும்.

இன்று எம்மிடையே இயக்கங்களின் அராஜக நடவடிக்கைகள் சிலவற்றின் காரணமாக இராணுவ நடவடிக்கைகள் எல்லாம் பயங்கரவாதம் என்கிற மனோநிலைக்கு எம்மை தள்ளிச் சென்றுள்ளது.

ஒரு விடுதலைப்போராட்டத்தில் பயங்கரவாதத்தை நாம் கோட்பாட்டு ரீதியில் நாம் ஒருபோதும் நிராகரிக்கமுடியாது. ஏனெனில் பயங்கரவாதம் என்பது போராட்ட நடவடிக்கைகளில் ஒரு வகையாகும். அது படைகளின் குறிப்பிட்ட தருணங்களில் இன்றியமையாததாகவும் உள்ளது. ஆனால் விடுதலைப்போராட்டத்தில் முழு ஏற்பாட்டுடன் நெருக்

"இவ்வளவு காலமும் மார்க்ஸியத்தின் போதனைகளை போராட்டத்தின் புரட்சிகர தத்துவத்திற்குரிய உறுதி வாய்ந்த அடித்தளமாக கருதிய பலர் இன்றைய கிழக்கைரோப்பிய நாடுகளினது மாற்றங்களுக்கான காரணங்களை சரியாக ஆய்வு செய்யாது மார்க்சியம் முற்றிலும் குறைபாடானது, பழமையானது எனக் குரல் எழுப்புகின்றனர்"

www.padippakam.com

கமாகப் பின்னிப் பிணைந்த நிலையில் களம் புகுந்து போர் புரியும் படையின் நடவடிக்கையாகப் பயங்கர வாதத்தை கருதாமல் தனித்து நிற்கும் தாக்கும் செயலாகவே மேற்கொள்கிறார்கள். இதனால் இப்போராட்டம் பொது எதிரியை சீர்குலைப்பதைவிட புரட்சிகரசக்திகளையே சீர்குலைத்துள்ளது.

இன்று ஈழத்தில் சிதறியுள்ள பலமனிதாபிமான சக்திகள் மற்றும் புரட்சிகர சக்திகள் போாராட்டத்தை முன்னெடுக்க ஆர்வத்துடன் முற்பட்டாலும், இவர்களுக்கு சரியான தலைமையை கொடுக்கக் கூடிய அமைப்பு எதுவும் இல்லாத நிலையாலும் ஆற்றல் மிக்க பல இளைஞர்கள் பயங்கரவாதத்தை தழுவுகிறார்கள். இதனால் நாம் கொண்ட தத்துவங்கள் மீது நம்பிக்கை இழந்து, அதிருப்தி அடைந்து ,எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டு புரட்சிகர சக்திகள் சிதறியிருப்பதால் மக்களுக்கும் புரட்சிகர செயற்பாடுகளுக்கும் உள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டே செல்கிறது.

இந்நிலையில் சமூக ஜனநாயக சக்திகளை ஒன்றிணைக்கவும், துண்டிக்கப்பட்ட நிலையிருக்கும் புரட்சிகர செயற்பாடுகளை ஒருங்கமைக்கவும் அகமும் புறமும் பத்திரிகைகள் வெளிவரவேண்டும்.

பத்திரிகைகள்தான் இவ்வாறான அமைப்பை சீராக வளர்க்கவும், செழுமைப்படுத்தவும், விரிவுபடுத்தவும் அடிப்படையாக்கமாகப் பயன்படும். மேலும் பத்திரிகைகள் கருத்துக்களை பரப்புவதிலும் அரசியல் அறிவைப் புகுத்துவது அரசியல் கூட்டாளிகளை ஈர்த்துகொள்வது ஆகிய நடவடிக்கைகளில் மட்டும் அடங்கிவிடக் கூடாது. மாறாக கூட்டுத்துவ பிரச்சாரனாகவும், கூட்டுத்துவ ஆய்வாளனாகவும் இருப்பதோடு கூட்டுத்துவ ஒழுங்கமைப்பாளனாகவும் இருக்கவேண்டும்.


புரட்சி நமக்கு கற்றுக் கொடுக்கும் அதேவேளை திரளான மக்களுக்கும் கற்றுக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இன்று சமூக ஜனநாயகவாதிகளின் முன் வைக்கும் கேள்வி இதுதான். புரட்சிக்கு எம்மால் எதையாவது கற்றுக் கொடுக்க முடியுமா? புரட்சி மீது உண்மையான உழைக்கும் மக்களின் வர்க்க முத்திரை இடுவதற்கு இவ்வளவு காலமும் போல் சொல்லளவில் இல்லாமல் செயலில் புரட்சியை ஓர் உண்மையான, நிர்ணயமான வெற்றிக்கு இட்டுச் செல்வதற்கும், ஜனநாயகப் போக்குள்ள பூர்சுவாக்களின் நிலைப்பாட்டில் இல்லாது அரைமனத்தன்மையற்று துரோகத்தன்மையை செயல் சக்தியற்றதாக செய்வதற்கு நம் சமூக ஜனநாயக போதனையில் தவறின்மையுடன் முழுவதும் புரட்சிகரமான ஒரே வர்க்கமாக திகழும் நிலையில் உழைக்கும் மக்களுடன் எமக்குள்ள பிணைப்பையும் நம்மால் பயன,படுத்திக் கொள்ளமுடியுமா என்பதே இன்றைய கேள்வி.

இக்குறிக்கோளை நோக்கியே நம் முயற்சிகள் அனைத்தையும் செலுத்தவேண்டும். ஒரு புறத்தில் ஈழத்தின் இன்றைய அரசியல் மதிப்பீடுகளைப் பற்றி நாம் தெளிவாக சொல்ல முற்படுமளவிற்குதொழிலாளர்களை ஒன்றிணைக்க அவர்கள் தலைமையிலான போராட்டத்தை முன்னெடுக்க உள்ள அகநிலை புறநிலை காரணிகளை தேடி அதற்கான கோசங்களை முன்வைத்து செயற்படவேண்டும். இதுதான் இன்று நாம் செய்ய வேண்டிய உடனடி "தேடல்" என நம்புகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com

# சுதந்திரம் பெறும் நமீபியா




சந்திர பாலு

1990 மார்ச் மாதம் 21ந் திகதி நள்ளிரவு.நமீபியா நாட்டின் தேசிய அரங்கமொன்றில் திரளான மக்கள் கூட்டம் நிறைந்திருக்கிறது.நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் சுதந்திர தின விழாவில் கலந்து கொள்ள வந்திருக்கிறார்கள்.மேலே பறந்து கொண்டிருந்த தென்னாபிக்க அரசின் கொடி இறக்கப்படுகிறது அதேவேளை நமீபியாவின் தேசியக் கொடி மேலே ஏற்றப் படுகிறது. இறக்கப் பட்ட கொடியுடன் தென்னாபிரிக்க அரசின் காலனித்து ஆட்சி முற்றுப்பெறுகிறது.நமீபிய மக்கள் நூற்றாண்டு கால,காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுதலை பெறுகிறார்கள்.

ஏறக்குறைய 1,500,000 மக்கள் வாழும் நமீபியா, அத்லாந்திக் சமுத்திரத்தை மேற்கு எல்லையாகவும் வடக்கே அங்கோலாவையும்,வடகிழக்கே சம்பியாவையும்,கிழக்கே பொற்சுவானவையும் அயல் நாடுகளாகக் கொண்டுள்ளது.

1890 இல் ஜெர்மன் நாட்டின் காலனித்துவ நாடாகவும், 1913க்குப் பின்னர் தென்னாபிரிக்க நாட்டின் காலனித்துவ நாடாகவும் இருந்த நமீபியா ஐரோப்பிய முதலாளித்துவ வாதிகளாலும், அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளாலும் தென்னாபிரிக்க அரசின் உதவியுடன் இயற்கை வளங்கள் சூறையாடப்பட்டு வந்தன. 1931ல் முப்பதினாயிரம் வெள்ளையர்கள் 38 மில்லியன் நிலத்திற்கு சொந்தக் காரர்களாகவும் பூர்வீகக் குடிகளான நமீபிய மக்களுக்கு(253,000) 17 மில்லியன் நிலம் என்கிற விதத்திலும் அம் மக்களின் நிலங்கள் ஆக்கிரமிப்பிற்கு

படிப்பகம்

www.padippakam.com

உள்ளாகின.

முதலாவது உலக யுத்தம் முடிந்த பின் ஜெர்மனியின் காலனித்துவ ஆட்சி முற்றுப் பெற்றதும், சர்வதேச நாடுகள் சங்கம் நமீபியாவிற்கு சுதந்திரம் வழங்கப் படவேண்டுமென தென்னாபிரிக்க அரசிடம் சில ஆணைகளை பிறப்பித்திருந்தது. ஆனால் தென்னாபிரிக்க அரசானது அவ்வாணைகளை மீறி அந்நாட்டை இராணுவ ஆக்கிரமிப்பிற்கு உள்ளாக்கியது.

இரண்டாவது உலக யுத்தத்தின் பின் ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டபோது நமீபியாவின் அரசியல் நிர்ணயம் தொடர்பாக சர்வதேச சங்கத்திற்கு பதிலாக தோற்றுவிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபைக்கு உரிமை இருக்கிறது எனவும் தென்னாபிரிக்கஅரசு நமீபியாவில் நடாத்தும் ஆடசி குறித்து அறிக்ககை சமர்பிக்க வேண்டுமெனவும் தீர்மானம் நிறைவேற்றியது.

1966ல் தென்னாபிரிக்க அரசானது நமீபியாவில் நடாத்தும் ஆட்சி சட்ட விரோதமனதென அறிவித்த ஐக்கிய நாடுகள் சபை நமீபிய மக்களது மனித உரிமைகள் பறிக்கப்பட்டு விட்டதாகவும், அந்நாட்டை பாதுகாப்பதற்கு பதிலாக சுரண்டி வருகிறதெனவும் குற்றஞ்சாட்டியது. இதன்பின் நமீபியாவின் முழுநிர்வாகத்திற்கும், அந்நாடு சுதந்திரம் பெறுவதற்கான ஆயுத்தங்களைச் செய்வதற்கும் ஐக்கிய நாடுகள் சபை பொறுப்பாக இயங்குமென அறிவித்து 1967ல் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஒன்றை நிறுவியது.

இவற்றையெல்லாம் புறக்கணித்த தென்னாபிரிக்க அரசு நமீபியாவை தொடர்ந்து சுரண்டி வரலாயிற்று.

இவை இவ்வாறிருக்க 1960ம் ஆண்டு தென்னாபிரிக்க அரசின் அடக்கு முறை ஆட்சியை எதிர்த்து நமீபிய மக்கள் விடுதலைப்போராட்டம் ஒன்றை முன்னெடுக்கத் தலைப்பட்டனர். 1960ம் ஆண்டு ஏப்ரல் 19ந்திகதி "தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் அமைப்பு"(SWAPO) ஒன்றை அவர்கள் தோற்றுவித்தார்கள். இவ்வமைப்பு 1965ம் ஆண்டுகளில் நாடுமுழுவதும் பரவலாக தனது வேலைத் திட்டங்களை மேற்கொண்டு செயற்பட்டு வரலாயிற்று.1970இல் ராணுவ ஒடுக்கு முறைகளுக்கெதிரான ஆயுதப் போராட்டத்தை நடாத்த (PLAN) என்னும் இராணுவப் பிரிவொன்று "சுவாப்போ" வால் உருவாக்கப்பட்டது.

நமீபியாவின் விடுதலைக்காக அரசியல்,ராணுவப் போர்த்தந்திரங்களையும்,யுக்திகளையும் மேற்கொண்டு "சுவாப்போ" போராடி வருகையில் தென்னாபிரிக்க அரசு அவ்வமைப்பை முறியடிக்க தீவிர ஒடுக்கு முறையை மேற்கொண்டது. 1974ல் அங்கோவா நாடு போர்த்துக்கேய அரசின் காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுதலையடைந்ததும் "சுவாப்போ" அங்கோவாவை மையமாகக் கொண்டு இயங்கியதுடன் சர்வதேசரீதியாக கட்சிவடிவம் பெற்று பலம் பெற்ற அமைப்பாகத் திகழ்ந்தது.

1989ம் ஆண்டு நவம்பர் மாதம் நமீபியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் "சுவாப்போ"வும் போட்டியிட்டது.72 தேர்தல் ஆசனங்களில் "சுவாப்போ" 41 இடங்களையும் (57.33), கூட்டு முன்னணி 21 இடங்களையும்(28.55) கைப்பற்றின. இத்தேர்தலின் பிரகாரம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்ற "சுவாப்போ"

www.padippakam.com

இயக்கங்களைப் பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள்?.

மக்களின் அபிப்பிராயம், கருத்து என்பது உறைந்து போன நிலையில் உள்ளது. அவர்கள் என்னதான் நினைக்கிறார்கள் என்பது யாருக்குமே தெரியாது. உண்மையில் யாருமே அவர்களுடன் நின்று வாழ்ந்து அவர்களது உணர்வுகளைப் புரிந்து கொள்ளவில்லை. இதுதான் உண்மை. நாங்கள் உட்பட அனைத்துக் குழுக்களையும் மக்கள் தண்டிக்கப் போகிறார்கள். என்று நினைக்கிறேன். அவர்களது துயர அனுபவங்கள், எங்களுடையவற்றைக் காட்டிலும், வேறு எந்தக் குழுவைக் காட்டிலும் அதிகமானவை. சாமானிய மனிதர்களைக் காட்டிலும் அரசியல் அமைப்புக்களில் உள்ள எங்களைப் போன்றவர்கள் அதிக பாதுகாப்புடன் இருக்கிறோம் என்பது தான் உண்மை.

மக்களுடைய ஆதரவை யார் கேட்டாலும் கொடுப்பார்கள். ஏனெனில் ஆதரவு கேட்பவர்களது கையில் ஆயுதங்கள் இருக்கின்றன. ஆனால் அவர்களது மனதில் இருப்பது என்ன என்பதை யாராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. உளவியல் ரீதியாகப் பார்த்தால் கடுமையான கொடுங்கோன்மைக்கு அவர்கள் உள்ளாக்கப்பட்டிருப்பது புரியும்.


ஒரு விதமான மனநிலையில் மக்கள் இருக்கிறார்கள். ஆகையால் இப்பொழுதும் அவர்களுடைய கருத்து யாது என்பதை அறிய முடியாது. திரும்பவும் அவர்களைத்தட்டிக்கொடுத்து ஆறுதல் படுத்தி அமைதியான ஒரு சூழ்நிலைக்கு அவர்களை இறக்கி சுதந்திரமாகப் பேசக் கூடிய ஒரு மனநிலையையும் சூழ்நிலையையும் உருவாக்கி அவர்களைப் பேச வைத்த பின்தான் அவர்கள் கருத்து என்னதென்று அறிந்து நாங்கள் சொல்லமுடியும்.

அதற்கு முன்னால் அப்படி ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

**கட்சியின் தலைவரான சாம் நுஜோமா (Sam Nujoma) சுதந்திர நமீபியாவின் தலைவராக தெரிவு செய்யப்பட வேண்டியவரானார். தென்னாபிரிக்க அரசு தனது படைகளை நமீபியாவிலிருந்து விலக்கிக் கொள்ள முடிவு செய்தது.**

**சில மாதங்களுக்கு முன், இடம் பெற்ற நெல்சன் மண்டேலாவின் விடுதலையும், நீண்டகால ஆக்கிரமிப்புக்கு எதிரான யுத்தத்தின் மூலம் கிடைத்த நமீபியாவின் சுதந்திரம் என்னும் பேறும், உற்சாகமூட்டுவதாகவும் நீண்டநாட்கள் மனதில் வைத்து போற்றும் தன்மையுடையதாக இருந்தாலும், நமீபியா தென்னாபிரிக்க அரசிலோ அல்லது ஐ.நா பொதுக்குழுவிலோ தங்கியிருக்கப் போவதில்லை.**

**நமீபியாவின் உண்மையான சுதந்திரம் இன்னும் பல கஸ்டமான படிகளைத் தாண்டி செல்லவேண்டியிருப்பதால் இது நமீபியாவின் சொந்த மக்களில் தங்கியிருப்பதிலேயே நிறைவு செய்யப்படும்.**




படிப்பகம்

www.padippakam.com

## வாசகர்களிடமிருந்து.....

அக்னி, கன்னியிதழ் கரம் கிட்டியது. அக்னி என்ற பெயரைக் கேட்டவுடன் பாரதியின் இந்தப் பாடல் நெஞ்சில் நிழலாடியது.

"அக்னி குஞ்சொன்றை கண்டேன்"
"அதை ஆங்கிஙை மரப் பொந்தில்
"வைத்தேன். வெந்து தணிந்தது
"காடு, தழல் வீரத்தில் குஞ்சென்
"றும் மூப்பென்றும் உண்டோ?"

தேனீ ஆசிரியர் குழுவனால் வெளியிடப்பட்ட குற்றச் சாட்டுகளை நிராகரித்து அக்னியை வெளிக் கொணர்ந்ததன் மூலம் உங்கள் நோக்கத்தை எடுத்துக் காட்டியுள்ளீர்கள்.

"நெல்சன் மண்டேலா"வைப் பற்றி பெயரளவிலே மட்டும் அறிந்திருந்த பலருக்கும் மண்டேலாவைப் பற்றிய விபரங்களும் தந்து, சுதந்திரத்திற்காகப் போராடும் அந்த தலைவருக்கு இதழின் முகப்பில் முதவிடம் தந்தமை சிறப்புக்குரியது.

கேள்வி பகுதியில் ஒரு சிறு குறை யார் கேள்விக்கு யார் பதிலளிக்கிறார்கள் என்பதே. சில சமயம் கேள்வி எம்முடையதாய் இருந்து பதில் யாரிடம் இருந்து வருகிறது என்பதை கேள்வி கேட்பவரும் அறியலாம் அல்லவா?...

பத்திரிகையில் பக்கங்கள் கூடாமல் ஆக்கங்களை அதிகரிப்பது நல்லது. ஒரு இதழிற்கும் அடுத்த இதழிற்கும் கால இடைவெளி கூடும்போது வாசகர்கள மத்தியில் ஐயங்கள் தோன்ற வாய்ப்பாகிறது.

அக்னியின் சிறுபொறியை ஊதி பெரு நெருப்பாக, நாங்கள் வாழ்த்துகறோம்.

ஆலன் வாசகர் வட்டம்

அன்புடன் ஆசிரியர் குழுவிற்கு, தாங்கள் அனுப்பி வைத்த "அக்னி" அறிமுக இதழ் கிடைத்தது நன்றி.

இனியவனின் சிறுகதை யதார்த்தத்தை ஒட்டியதாக அமைந்திருந்தது. நெல்சன் மண்டேலாவின் வரலாற்றை அவரது விடுதலையோடு அறிந்து கொண்டேன். தொடர்ந்து இதழ்களை எனது முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

கொகன் பேர்க் ரவீந்திரன்

---

"பொதுஜன அபிப்பிராயம், பொதுஜன அபிப்பிராயம் என்று சொல்கிறார்களே! அதற்கு என்றுமே நான் சலுகை காட்டியதில்லை. அதற்கு உகந்தவாறு என் கருத்துக்களை மாற்றிக் கொள்பவனுமல்ல நான். அஞ்சா நெஞ்சத்துடன் ஆள்வோரை எதிர்க்கிறேன், ஆனால் ஆளும் சக்திகளை விட மக்களிடம் ஊறியிருக்கும் பழமைப் பிடிப்புக்களும், அவர்களை பற்றியிருக்கும் மூடநம்பிக்கைகளும்,மிகப்பயங்கரமானவை,எனினும் என் கருத்துக்களைப் பற்றி மக்கள் என்ன நினைப்பார்களோ, என்ன கருதுவோர்களோ, ஏற்பார்களோ மாட்டார்களோ என்ற கவலையெல்லாம் எனக்கில்லை.

கார்ல் மார்க்ஸ்

படிப்பகம்

www.padippakam.com



"தேசம் தாண்டிய நதிகள்" ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் நான்காவது சிறுகதைத் தொகுப்பாகும். இந்தத் தொகுதியல் பன்னிரண்டு சிறுகதைகள் தொகுக்கப்பட்டுளன.

ஜெயா-சிறி (சுவிஸ்), கோவை றைதன் (ஒல்லாந்து), நொயிஸ் சிவபாலன் (ஜேர்மனி), சாரணியன் (ஜேர்மனி), சு. கருணாநிதி (பிரான்ஸ்), சி. உதயகுமார் (பிரான்ஸ்), சுசீந்திரன் (ஜெர்மனி), சிறி (சுவிஸ்), வசந்தி (பிரான்ஸ்), நல்லைக்கண்ணன் (பிரான்ஸ்), சபாஸ் (சுவிஸ்) ஆகியோரது படைப்புக்கள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. சில சிறுகதைகள் "அறுவை", "சிந்து" ஆகிய சஞ்சிகைகளிலிருந்து மறுபிரசுரமாகியுள்ளன.

கதைக் கரு என்பது வாழ்விலிருந்து பெறப்பட்டு ஒரு குறிப்பிட்ட படைப்பில் சித்தரிக்கப் படும் விசயங்களின் அடுக்காகும். கதைக்கரு என்பது வெறுமனே வாழ்விலிருந்து பெறப்பட்ட விசயமல்ல. அது வாழ்வின் விசயங்களிலிருந்து ஒரு படைப்பாளியால் பரிசோதிக்கப்பட்டு வாசகன் அல்லது பார்வையாளனுக்குத் தரப்படுகின்ற அம்சமாகும்.

புகலிட இலக்கியங்களின் சாட்சியங்களாக அமையப்பெறும் இலக்கிய வெளியீடுகளில் "தேசம் தாண்டிய நதிகள்" சிறுகதைத் தொகுப்பும் இடம் பெறும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

தொடர்புகட்கு:
Association Des Ecrivains
Tamouls Dans L"Europe
30, Rue de tourville,
93600, Aulany Sous Bois
France

---

**இறுதி நிகழ்ச்சியாக இடம்பெற்ற Bielefeld நாடகக் குழுவினரின் "காலச்சுவடுகள்" என்கிற நாடகம் இடம் பெற்றது. இந்நாடகம் தொடர்பான விமர்சனம் ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.**

**எட்டாவது இலக்கியச் சந்திப்பு Essen நகரில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டு அதற்கான செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. 7.00 மணயளவில் நன்றியுரையுடன் இலக்கியச் சந்திப்பின் ஏழாவது தொடர் நிறைவு பெற்றது.**

www.padippakam.com

# வீட்டுக்கு வெளியே..

"பனை வடலியும், செம்மண் தரையும், பரவைக்கடலும், செம்புத் தண்ணீரும் கிடுகுவேலிகளும் மணல் ஒழுங்கைகளும் அவன் போகுமிடமெல்லாம் நிழலாகத் துரத்தும். தன்னிடம் வா என்று அழைத்துக் கொள்ளும்"

உச்சி வெயில், தகதகக்கின்ற அனல் வெயில் இதனிடையே நடந்து போகின்ற ஒரு மனிதன். அந்தப் பெருமணல் வெளியை தாண்டிச் செல்வதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கிறது அவனது மனம். அந்த மனமும் கூட துடைத்துவிட்ட வானத்தில் ஒடுகிற முகில் துண்டினை, கணப்பொழுதிலே துள்ளியோடுகின்ற வெள்ளை முயற்குட்டியாய் கண்டு புன்னகை செய்து விடுகின்றது.

வானின் இடியைக் கண்டு அஞ்சிய மனிதனிலிருந்து வானையே தனது வீதியாய் ஆக்கிவிட்ட இன்றைய மனிதன் வரை அவன் மனதிலே இந்த இயல்பு குன்றாமல் குறையாமலே இருந்து வந்திருக்கிறது. அழுகையிலும், அவலத்திலும் மட்டு மல்லாது சிரிப்பிலும் களிப்பிலும் அவனது மனம் கதையாய், கவிதையாய், ஓவியமாய், நுண்கலைகளாய், சிலிர்த்து மலர்ந்திருக்கிறது. காலந்தோறும் அவன் இவ்விதமே தன்னை இவற்றிலே பதிவு செய்து கொண்டான். இவையே அவனது கலாச்சார பண்பாட்டுச் செல்வங்களாய் உருக் கொண்டன.

இதே கதை எல்லாத் தேசங்களிலும் பொதுக்கதை. கடந்த சுமார் பத்தாண்டு காலம், ஈழத் தமிழ் மக்களின் வாழ்,விலே கண்ணீரையும், கருமையையும் விதைத்த காலம். இன ஒடுக்குமுறை அவர்களில் பலரை பூமிப் பந்தின் பல்வேறு பல்வேறுபகுதிகளுக்கும் அகதிகளாய் சிதறியோடவைத்தது.

பூமிப்பந்தில் சிதறியுள்ள ஒவ்வொரு ஈழத்தமிழனும் கவலையையும், சோகத்தையும் தன்னுள்ளே நிறைந்திருக்கக் காண்பான். பனைவடலியும், செம்மண் தரையும், பரவைக் கடலும், செம்புத் தண்ணீரும், கிடுகு வேலிகளும், மணல் ஒழுங்கைகளும் அவன் போகுமிடமெல்லாம் நிழலாக அவனைத் துரத்தும் தன்னிடம் வா என்று அழைத்துக் கொள்ளும். பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தன அல்லவா?.

ஆனாலும் சூழ்நிலைகள், வேரில்லாத மனிதனையும் வேரூன்றச் செய்து விடுகின்றன. அகப்படும் இடத்திலெல்லாம் ஈழத்தமிழர் எங்கெல்லாம் சிதறியிருக்கிறார்களோ அங்கெல்லாம் கலை இலக்கிய முயற்சிகளும் வேர் கொண்டு முளைவிட்டு தளிர்கள் தள்ளுவதை பார்க்க முடிகிறது. இந்தத் தளிர்கள் உயிர்ப்புள்ளவை. ஏக்கங் கொண்டவை. கனவுகளைக் கால்களில் வைத்திருப்பவை. எல்லாவற்



படிப்பகம்

www.padippakam.com

றையும் விட நம்பிக்கை தருவன.

இதனாலேயே ஈழத்து எழுத்துக்கள் இன்று சர்வதேச பின்னணியில் தடம் பதித்து உருவாகின்றன. தமது துயரையும் சர்வதேசத்திற்குரிய துயராகப் பெருமூச்சு விடுகின்றன. இப்படியே சமகால வரலாற்றையும் பதிவு செய்து விடுகினறன.புதிய பிரச்சினைகளை வேகத்தோடு அலசுகின்றன.

இலக்கியம் எதன் பொருட்டு என்கிற கேள்வி இன்னமும் கேட்கப்பட்டு கொண்டுதான் இருக்கின்றது.

இலக்கு உள்ளது இலக்கியம் என்பது பழைய விடை.

மக்களிடமிருந்து பெற்றும் கற்றும் பின்னர் அதனை செழுமைப்படுத்தியும் அவர்களின் மேம்பாட்டிற்காக அதை அவர்களுக்கே திருப்பிக் கொடுப்போமென்பது இன்னொரு பதில்

சமூகஒடுக்குமுறை, இனஒடுக்கு முறை ஆகிய மானிடத்தின் மீதான தளைகளை அறுத்தெறிய குரல் கொடுக்கின்ற எல்லா எழுத்துக்களும் உயர்ந்தவை. உண்மையானவை. இவைதான் இன்று வேண்டப்படுபவை. இதைத் தவிர மற்றவை எல்லாம் பொழுதை வீணடிக்கின்ற கவைக்குதவாத வெற்றுவாதங்கள் என எண்ணுகிறேன்.

துரதிருஸ்ட வசமாக இந்த வெற்றுவாதங்களே தமிழின் விமர்சனங்களாய் எங்கும் நிறைந்திருக்கின்றன. பொறுப்போடும் நேயபூர்வத்தோடும் வழங்கப்படுகிற விமர்சனங்கள் படைப்பாளியை நேராக்கி அவனது படைப்புக்களை செழுமை கொள்ள வைக்கும் பொறுப்பற்ற, அறிவீனமான, வாய்ப்பாட்டுத்தனமான விமர்சனங்களை புறந்தள்ளுகிற நிலமையை, ஆக்கபூர்வமான படைப்புக்கள் உருவாக்கியே தீரும். அதற்கு நாமும் வகை செய்யவேண்டும்.

இந்தத் தொகுதியிலுள்ள சிறுகதைகள் எல்லாம் ஒரே தரத்தின அல்ல என்பது உண்மையே ஆயினும், இவை யாவற்றிலுமே ஒரு பொதுத்தன்மை இழையோடுகிறது என்பதை எளிதில் உணர்ந்து கொள்ளமுடியும்.

அந்தப் பொதுத் தன்மைதான் என்ன?

தாய்நாட்டிலிருந்து இடம் பெயர்ந்து அந்நிய பூமிகளில் வாழ்கிறபோது ஏற்படுகிற கலாச்சார ரீதியான முரண்களை, அதன் பொருளாதார சமுதாய சிக்கல்களோடு இந்தத் தொகுதியிலுள்ள படைப்புக்கள் ஆய்வு செய்கின்றன.

எழுதுவதும் ஒரு எதிர்ப்புக்குரலே சுரண்டலும், ஒடுக்குமுறைகளும், இன ஒதுக்கு முறைகளும் நிறைந்த உலகிற்கு எதிராக நீங்கள் நில்லுங்கள். போராட்டமே வாழ்வாகிவிட்ட மண்ணின் மைந்தர்களான எமக்கு இப்படி நிற்றல் இயல்பான செயலென்பதை உலகிற்கு எடுத்துக் கூறுங்கள். என்றோ ஒரு நாள் நமது கனவுகள் மெய்ப்படும் அவ்வேளையில் நீங்களும் நாமெல்லோரும் எமது மக்களால் நினைவு கொள்ளப்படுவோம்.

**தேசம் தாண்டிய நதிகள் சிறுகதைத் தொகுப்பில் செ.யோகநாதனின் அணிந்துரையிலிருந்து.....**

---

## நூல் அறிமுகம்

### *தாயகம்*

Editor:
George R,Ckrhushchev
Georgicka Communications,
P.O.Box 1031, Station "F",
Toronto, Ont, M4Y 2T7
CANADA

www.padippakam.com

# வாசகர்களின் கேள்விகளும் வாசகர்களின் பதில்களும்

**இக் கேள்விகள் அனைத்தும் வாசகர் கலந்துரையாடலின் போது எடுக்கப் பட்டவை. கலந்துரையாடலில் பங்கு கொள்ள விரும்பும் வாசகர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறார் கள்**

**ஆ.கு**

காலாண்டிதழாக வெளிவரும் அரசியல் சஞ்சிகையான" சிந்தனை" சமீபத்தில் ஐந்து வருடங்களை பூர்த்தி செய்துள்ளது. சிந்தனையின் இத்தகைய வளர்ச்சி குறித்து கருத்து எதையும் அதன் ஆசிரியர் குழுவோ அல்லது வாசகர்களோ கருத்தெதுவும் வெளியிடாதது ஏன்?.

ஒரு சஞ்சிகையின் வளர்ச்சி அல்லது வெற்றி என்பது அது எவ்வளவு காலம் வெளிவருகிறது என்பதிலல்ல வாசகர்கள் மத்தியில் அது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதிலேயே தங்கியுள்ளது. சிந்தனையின் ஐந்து வருட பூர்த்தி வரவேற்கத் தக்கதாயினும் அச்சஞ்சிகையின் கடந்த கால நிகழ்கால நிலைப்பாடு குறித்து வாசகர்களிடையே உள்ள அதிருப்தி இதற்கு காரணமாக அமைந்திருக்கலாம் என கருதுகிறேன்.

விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசு கூட்டொன்று ஒருபக்கமாக இருக்கையில் புளொட் ஈ.பி.ஆர் எல்.எப் ஆகிய அமைப்புக்களுடன் சிறிலங்கா அரசு இன்னொரு கூட்டமைத்து புலிகளுடன் மோதலாம் என இன்னொரு கருத்து பரவலாக அடிபடுகிறதே?

கூட்டு என்பது இப்போ நகைப்புக்கிடமாகப் போய்விட்டது. அமெரிக்க, பிரித்தானிய கூட்டு, இலங்கை அரசுடனான கூட்டு, இந்திய அரசுடனான கூட்டு.....எவவாக கூட்டும் விடுதலைப் போராட்டத்திற்காகவென்று பிரச்சாரம் வேறு செய்யப்படுகிறது. மேற்கூறப்பட்ட கூட்டனைத்தும் விடுதலைப் போராட்டத்தில் ஏதோ ஒரு வகையில் சம்பந்தப்பட்டுள்ளன. அமெரிக்க, பிரித்தானிய தந்திரோபாயமும் சிறிலங்கா அரசு- விடுதலைப் புலிகள் கூட்டும் வெற்றிபெற்றிருக்கையில் மேற்படி செய்தியில் உண்மையிருப்பதாக தோன்றவில்லை.

இலக்கியச் சந்திப்பில் பெண்விடுதலை பற்றிய கருத்துக்கள் முக்கிய விவாதமாக முனைப்படைந்திருப்பது பற்றி என்ன கருதுகிறீர்கள்?

ஈழத்தின் தற்போதைய யதார்த்த அரசியல், சமூக, பொருளாதார பிரச்சினைகளை ஆய்வு செய்வதில் இலக்கியச் சந்திப்புக்களில் வெற்றிடம்தான் காணப்படுகிறது. இந்த வெற்றிடங்களை பெண் விடுதலைக் கருத்துக்கள் நிரப்புவதாக நினைக்கத் தோன்றுகிறது. ஐரோப்பிய புலப்பெயர்வு எமது பெண்களை நன்றாகச் சிந்திக்க தூண்டியுள்ளது. தம்மை அடிமைப் படுத்தியிருந்த நிலப்பிரபுத்துவ கருத்துருவங்களுக்கெதிராக போராடவும் உந்தியுள்ளது. பெண்விடுதலை தொடர்பாக ஆழமான பார்வையும் தெளிவான நிலைப்பாடும் இல்லாதிருப்பின் மேற்கத்தைய சூழல் கலாச்சார சீரழிவுகளுக்கு கொண்டு போய்விடும் என்பதை முக்கிய கவனத்தில் கொள்ளவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

எமது விடுதலைப் போராட்டம் சாதியமைப்புக்களை தகரச்செய்துள்ளதா?

இது ஒரு முக்கியமான கேள்வி.உண்மையில் சாதியமைப்புக்கள் தகர்க்கப்படவேண்டும் என்கிற கருத்து இளையதலைமுறையிடம் வேரூன்றிய அளவிற்கு அதற்கான வேலைத் திட்டமெதுவும் சரியான முறையில் முன்னெடுக்கப்படவில்லை என்பது போக, மாகண சபை அமைப்புக்களின் தவறான சில செயற்பாடுகள் சாதி முரண்பாடுகளை கூர்மையாக்கி வைத்துள்ளன. விடுதலைப்புலிகளை "பெரிசு" எனவும்,ஈ.பி ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப்பை சாதியமைப்புக்களின் பெயர் கொண்டு குடாநாட்டு மக்கள் தற்போது அழைத்துக் கொள்வதிலிருந்து இவற்றை ஊகித்துக் கொள்ளலாம்.

கிழக்கைரோப்பாவில் நடைபெற்று வரும் அரசியல் மாற்றங்கள் வலதுசாரி சக்திகளுக்கு சார்பாக நகர்வதேன்?.

கடந்தகால ஆட்சியாளர்கள் சாதாரண மக்களை திருப்தி படுத்தவில்லை என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளும் பட்சத்தில் முக்கியமாக ஒன்றை கவனத்தில் கொள்ளவேண்டும். 'முரண்பாடுகள் என்பது சர்வவியாபகமாக ஒவ்வொன்றின் இயக்கத்திலும் காணப்படுவதாகும். கார்ல் மார்க்ஸின் இந்த உண்மையை சரிவரப் புரிந்து கொள்ளாமல் ஆட்சிக்கும் மக்களுக்குமிடையே தோன்றிய முரண்பாடுகளை புரிந்து கொள்ளவோ அல்லது அவற்றை தீர்ப்பதற்கான எதுவித முன்னேற்பாடுகளையும் மேற்கொள்ளாததன் விளைவே இப் போக்கிற்கு காரணமாகும்.

இறுதியாக நடைபெற்ற இலக்கியச்சந்திப்பின் போது இடம் பெற்ற "காலச்சுவடுகள்" நாடகம் புதிய பரிணாமத்தை காட்டிநிற்கிறது.இதுபற்றி என்ன கருதுகிறீர்கள்?.

மருகிக் கொண்டு போகும் எமது நாட்டுப் புற பாரம்பரிய கலை வடிவங்களை புலம் பெயர்ந்த நாட்டில் வெளிக்கொணர்ந்திருப்பது வரவேற்கத் தக்க அம்சமாக உள்ளது. இருப்பினும் சமூகப் பிரச்சினைகளையும், முரண்பாடுகளையும் சமூக மாற்றத்தின் மூலமே தீர்க்கலாமே தவிர சீர்திருத்தங்களினால் அல்ல என்பதை இங்கு சுட்டிக்காட்டவேண்டியது அவசியமாகும்.

புலம் பெயர்வு - குடிப்பெயர்வு என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் விவாதிக்கப் பட்டு வருவது பற்றி...

இது தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் தொடர்ந்து இடம்பெற்று வந்தாலும்,நாட்டைவிட்டு புலம்பெயர்ந்து தற்காலிகமாக புகலிட நாட்டில் இருப்பவர்களை புலம் பெயர்ந்தவர்களெனவும், புகலிட நாட்டை நிரந்தரமாக வரித்துக் கொண்டவர்களை குடிபெயர்ந்தவர்களெனவும் ஒருசாரார் குறிப்பிட்டு வருகிறார்கள்.

ஈழத்தில் கடந்த சில மாதங்களாக நூற்றுக் கணக்கானோர் மர்மமாக கொலை செய்யப் பட்டுள்ளார்கள் இச் சம்பவங்கள் எதிர்கால அச்சுறுத்தல் ஒன்றை சுட்டி நிற்கிறதல்லவா?

இவை லத்தீன் அமெரிக்க விடுதலைப் போராட்ட நிகழ்வுகளை ஒத்திருக்கின்றன. தனிக் கட்சி ஒன்றின் ஏகப்பிரதிநிதித்துவத்தை உருவாக்குவதற்கான அறிகுறிகள்தான் இவை.மக்கள்



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் ரீதியாக விழிப்புணர்வு பெறாத வரைக்கும் அவர்கள் இத்தகைய சம்பவங்களை எதிர் நோக்குவது தவிர்க்க முடியாததே.

அமைச்சர் ரஞசன் விஜயரட்னா நிபந்தனையற்று விடுதலைப் புலிகளை ஆதரிப்பது ஏன்?

கடந்த காலத்தில் இலங்கையிலுள்ள பிரித்தானியாவிற்கு . சொந்தமான தேயிலைத் தோட்ட அதிபராக இருந்த இவருக்கு தற்போது விடுதலைப் புலிகளை ஆதரிப்பது இவரது எஜமானர,களது தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே. அதற்காகவே இவர் அமைச்சரவையிலும், அரசாங்கத்தின் உத்தியோகப் பேச்சாளராகவும் இருக்கிறார். பின்னணிகள் எல்லாம் ஒன்றாக இருக்கும் போது இவர் நிபந்தனையற்று ஆதரிப்பது ஒன்றும் வியப்புக்குரியதல்ல.

## நூல் அறிமுகம்




ஓசை
R.Rajagobal,
5 Rue Hermel,
75018 PARIS,
FRANCE.

இணையப் போகும் ஜெர்மனி குறித்தான பல்வேறுபட்ட கருத்துக்கள் பல தரப்பினராலும் முன்வைக்கப்பட்டபோதிலும், எல்லோரும் ஒரு கேள்வியொன்றை முன் வைக்கிறார்கள். இணையும் ஜெர்மனி ஆபத்தான ஒரு தேசமாக மாறுமா? என்பதே.

அவர்கள் 1940களில் இடம் பெற்ற நாஜிக் கொடுரங்களை நினைவு கூருகிறார்கள். இந்த விடயத்தில் பகிரங்கமான கருத்துக்களை மேற்கு ஐரோப்பிய நாடுகளும் முன் வைக்கவில்லை. இவர்களைப் பொறுத்த மட்டில் கிழக்கு ஜெர்மனி சோசலிச முகாம்களிலிருந்து விலகி நேட்டோ அமைப்புகளில் சேருவதை விரும்புகிறாார்கள்.

சோசலிச முகாம்களை வேரோடு அழித்திட அவர்கள் கோபர்ச்சேவின் சீர்திருத்தங்களை தமக்கு சாதகமாகப் பயன்படுத்துகிறார்கள். இதனடிப்படையில் இரு ஜெர்மனிகளின் இணைவை தவிர்க்க முடியாதவாறு ஆதரிக்கமுற்படுகிறார்கள்.

எது எப்படியாயினும் இதுவரை காலமும் சோசலிசத்தை கட்டியெழுப்புகிறோம் என மக்களின் ஆதரவில்லாது ஆட்சி நடாத்தி வந்த பழைய ஆட்சியாளர்களை எப்படி மக்கள் கடந்த தேர்தலின் போது தூக்கியெறிந்தார்களோ அதே போல் இனி வரும் காலங்களில் அவர்களது தேவைகளை நிறைவேற்ற முடியாத, எந்த வொரு ஆட்சியையும் அவர்கள் நீடிக்க விடமாட்டார்கள்.

எம். லிங்கம்


படிப்பகம்

www.padippakam.com

## துலங்கும்

பகலிருக்க
மங்கிய ஐரோப்பிய தேசம்.
குளிர் விழுங்கி
கொதி கலன்களாக நீண்டு பரவும்
மேற்கைய நகரங்கள்.

அந்நிய சேதனம் நிரவி
நகரெங்கும் உலா வரும்
கருப்பு சுவாசப் பைகள்
தமிழ் பேசி

மேற்கு என்ன அதிசயம் உதிர்க்கும்
மாயத்தவன் மாடமா?

அரிவாளும், அலவாங்கும்
தொலைத்து
ஐரோப்பிய தொழிலகங்களில், இவர்கள்
சிரித்துக் கொண்டார்களே?
ஒரே மனையில், ஒரே உலையில்
கை அலம்பி ஆரவாரிக்கின்றனரே?
பாரதியின் கனவு
நனவானதோ ஐரோப்பிய
நகரத்திலேனும்?
"சாதியிரண்டொழிய" கேட்டு
ஆணும், பெண்ணுமாக மட்டும்
ஒதுங்கிப் போயினரே?

கண்முன்னே புரட்சி கண்டேன்
தமிழனும் ஒன்றுபட, ஆகா!
கண்களில, நீர் பூக்க
சிலித்தேன் ஒருகணம்.
தெறித்த கண்ணீர்த் துளியொன்று
உலுப்பிற்று எனை.

"மாவைக்கண்"மூடனே
சமூகம் உற்றாயோ? கேள்
தமிழில் அளாவிச் சிரிக்க.
வெள்ளையனும் வருவானோ உனைத்
தேடி?

ம்விந்த வாடகை பகிர
எவன் வருவான் மூச்சடக்க?

புரிந்து கொள், இவையாதும்
"தேவையனும்", "வர்க்கனும்"
கூட்டுத்தான், காசு எண்ணி வைக்க!

மங்கியவை துலங்கும்.

பொழுது மீந்த, மீண்டும் புலரும்
எம்மில் யார் பெரியவன்?
தேடி வைப்பார் அளவு கோல்களை
பணமும், சாதியுமாக
ஆயினும்
எங்கே கண்டாய் ஒற்றுமையை?"

மங்கிய வெற்றிடம் நிரவ
மாயமாக முளை தள்ளும் புதுசாதிகள்"

புருவம் தெரிய
"என்னே?" என விழித்தேன்.
"அந்த" "இந்த" இயக்கத்தவனென
மிருகங்களாக இழிந்து,
அடித்துக் கொள்கிறான்
ஐரோப்பிய தெருக்,களில்
தன் சமூகம் கொன்று"


தேங்கிய சந்தோசம்
கானல் நீராம், அண்மையில்
உருச் சிதைந்து போயிற்று.

கவலை நீர் கண் கழுவிற்று
இப்போது புரிந்ததென
நான நடந்தேன்
ஐரோப்பிய தெருக்களில் குளிர்வென்று.

• தம்பா

படிப்பகம்

www.padippakam.com



காலச் சுவடுகள்





படிப்பகம்